# சுதேசமித்திரன்

10TH OCTOBER '48 As 4/-



## ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது

# WOODWARD'S GRIPE WATER

*keeps baby well*

1-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

# சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

## காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

**இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.**
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

## ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.



# ஆனந்த குஸுமாகர லேகியம்

**துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!**

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

## மலையாள மெடிகல் ஹால்

**H. O. TRIVANDRUM**
**189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.**

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.



# நீங்கள் வாங்கும் சரக்கின் பெறுமானம் நீங்கள் கொடுக்கும் பணத்தின் மதிப்புக்குக் குறையாமல் இருக்கிறதா?

விலை குறைவாயிருக்கிறதென்று எப்பொழுதும் மட்டம் சரக்குகளை வாங்காதீர்கள். அப்படி வாங்கினல் நீங்கள் கொடுக்கும் பணத்தின் முழுப்பெறுமானத்தையும் அடைந்தவர்களாகமாட்டீர்கள். அவ்விதமின்றி விலை சிறிது அதிகமானலும் நல்ல சரக்கையே வாங்குவீர்களானல், நீங்கள் கொடுக்கும் பணத்தின் முழுப்பெறுமானத்தையும் அடைந்தவர்களாவீர்கள்.

இந்த அடிப்படையான உண்மை எல்லா சரக்குகளின் விஷயத்திலும் பொருந்தும்.

டாப்பியோக்கோ மாவு விஷயத்திலும் பொருந்தும். டாப்பியோக்கோ மாவு வாங்கும்பொழுதும் இம்முறையையே கைக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**A. V. S.** டாப்பியோக்கோ கிழங்கு மாவுகள் சுத்தமாயும், சுகாதார முறைப்படியும் நீண்டநாள் அனுபவத்தில் தயாரிக்கப்படுபவை. அவைகள் கலப்பில்லாதவையென்பதற்கு அத்தாக்ஷியாக மைக்ருஸ்கோப் மூலம் பரீட்சிக்கப்பெற்று நாணயமான டாப்பியோக்கா மாவு என்று ஸர்ட்டிபிகேட் பெற்றிருக்கிறோம்.

மூட்டையின் தையல் முகப்பில் **A. V. S.** என்ற மார்க்குகள் அடங்கிய ஈய சீல் கட்டியிருப்பதுதான் இப்பொழுது மார்க்கட்டில் பிராபல்யமாகிவரும் **A.V.S.** டாப்பியோகா மாவு **'A'** குவாலிட்டி.

டெக்ஸ்டைல் மில்கள், புரொவிஷன் ஸ்டோர்கள், பிஸ்கட் கம்பெனிகள், சிற்றுண்டிசாலைகள் மற்றும் பல தொழிற்சாலைகளுக்கும் நாங்கள் உயர்தரமானதும், சிக்கனமானதுமான **'A'** குவாலிட்டி மாவையே பெரும்பாலும் சப்ளை செய்து வருகிறோம். எங்களிடம் கிடைக்கும் மற்ற சரக்குகள்:—முதல் தரம் ஜவ்வரிசி, மஞ்சள் கடலை எண்ணெய், சுருட்டுப் புகையிலை, பீடிபுகையிலை முதலியன.

உறுதியானதும், 5 அந்தர்வரை எடை செய்யக்கூடியதுமான 'பைபீல்ட்' வேயிங் மிஷின் தராசுக்கு நாங்கள் பிரதம ஏஜண்டுகள்: தராசின் கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

விண்ணப்பிக்கவும்:—

**A. V. சுப்ரமண்யம்,**

**A. V. S.** டாப்பியோக்கா பிளவர் மில்ஸ் & ஜெனரல் சப்ளையர்கள், புகையிலை ஹோல் சேல் லைசென்ஸ்தாரர்கள், 94, பார்க்ரோடு, ஈரோடு. (S. I. R.) தந்தி: INSAF.

ஜோதிஷ வித்வான்

## V. S. சேஷாத்ரியாச்சாரியார்

**45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.**

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு................................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க.....................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

---

## பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

**Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

---

வாரியர்

## பிருங்காமலகாதி

### தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

**16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.**
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

**கே. எஸ். வாரியரின்**

**அஷ்டாங்க ஆயுர்வேதசாலா**

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936.)

---



## 1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

**காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.**

---

அழகிய பித்தளை, தாமிர, வெண்கல பாத்திரங்களுக்கு கோவையில் சிறந்த இடம்.

**பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், காண்டீன்கள் இன்னும் சர்க்கார் இதர ஸ்தாபனங்களுக்கும் சப்ளை செய்பவர்கள்**

**K. இராமச்சந்திரன்,**
பாத்திர வியாபாரம்,
**பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.**

---

## மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால். இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

**'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'**

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ, நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணா 9.

**ஷாஜஹான் புக் டெப்போ,**
30, சாந்தோம், சென்னை 4.

ரசிகர்களுக்கு
உல்லாசத்தை அளிக்க
தியேட்டர்கள் பெருமையுடன்
வெளியிடப்போகும் சித்திரம்
ஜுபிடரின்
மோகினி
எல்லோருக்கும் உகந்த
உல்லாச சித்திரம்....
...தயாரிப்பு...
M. சோமசுந்தரம்
JUPITER PICTURES CIRCUIT

★ தீபாவளி பண்டிகை ★

தீபாவளி பண்டிகைக்கு வேண்டிய நவீன மோஸ்தர் பட்டு ஜவுளி
தினுசுகள் எல்லாம் எங்களிடம் சரஸமான விலைகளில் கிடைக்கும்.

# R. S. E.

## ராதா ஸில்க் எம்போரியம்

( போன் : 84188 )

ஸன்னதி தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்
48—49, பெரிய தெரு,
கும்பகோணம்.

பம்பாயில் ஸ்பெஷல் பிராஞ்சு:—
ராதா ஸில்க் எம்போரியம்
2, விஸ்ரானிபவன், டிலாங்ரோட், G. I. P. பம்பாய்.

புரொப்ரைட்டர்ஸ் : R. K. ராதாகிருஷ்ண செட்டியார் & பிரதர்.

ஸ்தாபிதம 1924

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
“ தபோநிதி ” தியாகராயநகர், மதராஸ் 17

பிரசித்தி பெற்ற

## “ காஸினோ ”

முகப்பவுடர்

உங்கள் முகத்தை பொலிவுடன் பிரகாசிக்கச்செய்கிறது.

வாங்கும்பொழுது காஸினோ மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1.

ஆஸ்த்மாவை

குணப்படுத்துவது

## ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. “புரோஹித் ஸ்வாஸஹாரி” ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது “டாக்டர் புரோஹித் பார்மஸி” கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

வாழிய செந்தமிழ்!

# சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ புரட்டாசி௴ 25௳ ★ 1948-௵ அக்டோபர்௴ 10௳ No. 37

## பணப் பெருக்கம்

சென்ற வாரம் இந்திய சர்க்கார் விலைவாசிகளின் உயர்வைச் சமாளிப்பதற்காக உடனே எடுத்துக்கொள்ளப்போகும் நடவடிக்கைகளைப்பற்றி ஓர் அறிக்கை விடுத்தார்கள். இந்தப் பிரச்னை இப்போது திடீரென்று முளைத்ததல்ல. மத்திய சர்க்கார் முன்னதாகவே மாகாண மந்திரிகள், முதலாளிகளின் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகளின் பொருளாதார விற்பன்னர்கள் முதலிய சகல பிரிவினருடனும் மகாநாடு கூடிப்பேசி வந்திருக்கின்றனர். இப்பிரிவினரின் அபிப்ராயங்களையெல்லாம் அலசிப் பார்த்த பிறகே சர்க்கார் தாங்கள் எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கு உருக்கொடுத்திருக்கிறார்கள்.

நாட்டில் தேவைக்குப் போதிய உற்பத்தியில்லை. இந்த நிலைமையில் பணப் புழக்கம் மட்டில் தாராளமாகவிருந்து வருகிறது. இதனால் ஏற்பட்டிருக்கும் விபரீதத்தைக் களைவதுதான் சர்க்காரின் முக்கிய நோக்கம். சாதாரணமாக உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் கூடியவரை பணப் புழக்கத்தைக் குறைக்கலாம். அன்றாட வாழ்வுக்கு அத்தியாவசியமான பொருள்களை, அதாவது ஜவுளி, உணவு, சர்க்கரை, கிரோஸின் போன்ற பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி ஒருசீரான முறையில் அனைவருக்கும் அவை விநியோகமாகும்படி செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் முடிவுக்குவந்திருக்கிறார்கள். இந்த அபிப்ராயத்தை எல்லாரும் ஏகமனதுடன் வரவேற்பார்களென்பது திண்ணம். பணப் பெருக்கம் மேற்கொண்டு அதிகரிக்காமல் தடுப்பதற்காக மாகாணங்களிலும், மத்தியிலும் செலவுகளை சாத்தியப்பட்ட வரையில் குறைத்துக்கொள்வதென்றும் சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். ஆனால் இதற்கு முன்னதாகவே வியாபித்துள்ள பணப் பெருக்கத்தைத் தணிப்பதெப்படி? அதுதான் பிரச்னை. சரக்குகளின் விலை வெகுவாகக் குறைவுபடும்படி செய்து இப்பிரச்னையை உருவான முறையில் தீர்க்க வேண்டும்.

சர்க்காருடைய நோக்கம் நிறைவேறுவதற்கு உற்பத்தி அதிகரிக்க வேண்டும்; வரி போடுவதன் மூலமும், கடன் வாங்குவதன் மூலமும் நாட்டில் அதிகரித்திருக்கும் செலாவணியை மடக்கி தங்கள் வசம் தேக்கமடையச் செய்ய வேண்டும். வரி விதிப்பு என்றவுடன் பெருகியுள்ள செலாவணியைத் திரும்பிப் பெற வேண்டுமென்ற ஒரே கருத்துடன் இதில் பிரவேசித்தால் உத்தேச, அடிப்படை நோக்கமே சீர்கெட்டுவிடும். எனவே இதில் உஷாராயிருத்தலவசியம்.

வரி முறைகளைக் கையாள்வதற்குப் பதிலாக, அதிக வருமானமுள்ளவர்கள் வருவாயில் ஒரு குறித்த பகுதியைக் கட்டாயமாகச் சேமித்துவைக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வருவது நலம். இதன் மூலம் அதிகப்படியாக உள்ள பணம் புழக்கத்திலிருந்து எளிதாக நீங்கும். தொழில் அல்லது வர்த்தக விஸ்தரிப்புக்கான ஊக்கத்துக்கு தீங்கு நேராது. எனவே புதிதாக விவசாய வருமான வரி அல்லது வார்ஸு வரி விதிக்கும் யோசனைக்குப் பதிலாக மேற்குறித்த ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வருவதுபற்றி சர்க்கார் ஆலோசிக்கலாம். கட்டாயச் சேமிப்பு ஏற்பாட்டுக்கு உள்ளாகக்கூடிய தனவந்தர்கள் அதிகமில்லை. செல்வ நிலையைப் பொறுத்தவரை நடுத்தரத்திலும் சேராமல், கீழ்த்தரத்திலும் சேராமல் இடையேயுள்ள பெருவாரியான மக்களிடம்



சமீபத்தில் உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ குர்ஷீத்லால் கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் முன்னிலையில் விசுவாசப் பிரமாணமேற்கிறார். அவருக்கு முன் பதவியேற்ற ஸ்ரீ கே. சந்தானம் எதிர்ப்புறத்தில் உட்கார்ந்திருக்கிறார்.

பணப் புழக்கம் அளவுக்கதிகமாயிருப்பதே தற்போதைய விலைவாசி உயர்வுக்கு முக்கிய காரணம். அத்தகைய மக்களுக்கு கவர்ச்சியளிக்கக்கூடிய சிறு சேமிப்பு திட்டங்களை உருவாக்குவதில் சர்க்கார் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

பண்ட உற்பத்தி பெருக பல்வேறுதொழில்களுக்கு ஊக்கமளிக்கவேண்டிய அவசியத்தை சர்க்கார் உணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். குறிப்பாக வருமான வரி இனத்திலும், சுங்க வரி இனத்திலும் தொழில்களுக்குத் தாங்கள் காட்டவிருக்கும் சலுகைகளைத் தற்போதைய அறிக்கையில் குறித்திருக்கிறார்கள். ஆனால் தொழில்களில் ஈடுபட்டவர்களுக்கு அல்லது ஈடுபடவிருப்போருக்கு இவற்றால் ஏற்படக்கூடிய ஆறுதல் யாதாயினும், பொதுவாக தொழில்கள் விஷயத்தில் ஏற்கெனவே சர்க்கார் வெளியிட்டுள்ள கொள்கையை அவர்கள் மறந்து விடுவதற்கில்லை. முக்கியத் தொழில்கள் பலவற்றை இப்போதைக்குத்தனிப்பட்டவர்கள் நடத்திவரலாமாயினும், பத்து வருஷங்கள் முடிந்ததும் அவை சர்க்கார் வசமாகிவிடலாமென்பது அக்கொள்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்று. இதன் மூலம் தொழில்களில் ஈடுபட்டவர்களிடையே ஏற்பட்டுள்ள கலவரம் நீடிக்கும்வரை, தொழில் துறையில் விசேஷ அபிவிருத்தி காண்பதற்கில்லை. முதலில் இன்னின்ன தொழில்கள் மட்டுமே இனி சர்க்கார் வசமாகக்கூடுமென்று அவர்கள் தெளிவாக அறிவிக்க வேண்டும்; இந்தத் தொழில்களையும் குறைந்தது இருபது வருஷ காலத்திற்குப் பிறகே தங்கள் வசப்படுத்துவதுபற்றி சர்க்கார் யோசிக்கவேண்டும். ஏனெனில் பெரிய தொழில்கள் ஏற்பாடான முறையில் இயங்கும் நிலையை அடையவே குறைந்தது 5 வருஷங்களாகிவிடும். அடுத்துள்ள வருஷங்களில்தான் லாபம் சிறிது சிறிதாக அதிகரிக்கும். அந் நிலையில் சர்க்கார் அத்தொழில்களை எடுத்துக்கொண்டு விடுவரெனின், தனிப்பட்டவர்கள் அத்தகைய தொழில்களில் ஊக்கங்காட்டுவதற்கில்லை. எனவே தொழில்பற்றிய கொள்கையை சர்க்கார் உடனடியாக மாற்றிக்கொள்வது அவசியமாகும்.

தற்போதைய பணப்பெருக்க விபரீதத்தைச் சமாளிப்பதற்கான திட்டம் எதிலும் போக்குவரத்து சாதன ஊழலை மறப்பதற்கில்லை. சில சரக்குகள் போதியளவு இருந்தும், அவை துரிதமாகப் பல்வேறு இடங்களுக்கு போய்ச்சேர போதிய வசதியில்லாததால் விலைவாசிகள் ஏறுவது புதிய அனுபவமன்று. இக்குறைபாட்டைச் சீர்செய்வதுடன், பொதுவாக அரசாங்க நிர்வாகம் உண்மையில் திறமையாக இயங்கவும் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வது அவசியம். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அவர்கள் கையாளும் பரிகார முறை யாதாயினும் அதன் வெற்றி முக்கியமாக நிர்வாக சகடம் சிறப்பாகச் சுழலுவதையே பொறுத்திருக்கிறது. இதைச் சர்க்கார் மறக்கமுடியாது.

# கேள்விகள் ? வாழ்க!

ஜெயராமன்

மனிதர்களில் பலர் கேள்விக் குறியைப்போல் உருவத்தையுடையவர்களாக இருக்கிறார்கள். இந்த உருவத்திற்குக் காரணம் அதிகப்படியான மனக்கவலை என்னும் சரீரத்திற்குத் தேவையான சத்துப் பொருள்கள் சேராததுதான் என்று மனோதத்வ ஆராய்ச்சியாளர்களும் உடல் நூல் வல்லோர்களும் கூறுகிறார்கள். இந்தக் கேள்வி உருவங்களைப் பயன்படுத்திக்கொண்டு மருந்துக் கம்பெனிக்காரர்கள் "இந்தக் குறியைப்போல் ஒரு மனிதனின் படத்தை வரைந்து இவனுடைய நிலையையடையாமல் இருப்பதற்காக எங்கள் மருந்துகளை வாங்கிச் சாப்பிடுங்கள்" என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். ஆராயப் புகுந்தால், மனிதனின் வாழ்க்கை கேள்விகளிலேயே தொடங்கி கேள்விகளுடனேயே ஊடாடி, கேள்விகளாலேயே கட்டுப்படுத்தப்பட்டு, கேள்விகளுடனேயே முடிவடைகிறது என்று தோன்றுகிறது. வேதாந்த விசாரணையில் புகுந்தால் முதலில் 'நான் யார்?' என்ற கேள்வியைத் தன்னையே கேட்டுக்கொள்ளச் சொல்கிறார்கள். இந்தத் தத்துவத்தை நினைவூட்டுவதற்காகவே கடவுள் சில மனிதர்களுக்குக் கேள்விக்குறியின் உருவத்தைக் கொடுக்கிறார் என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது.

குழந்தை பிறந்தவுடனேயே வெளியில் இருப்பவர்கள் "என்ன குழந்தை?" என்றோ "பிள்ளையா, பெண்ணா?" என்றோ ஆவலுடன் ஒரு கேள்வியை விடுக்கிறார்கள். பிறகு பந்து மித்திரர்கள் வீட்டிற்குப் பெரியவரிடம் வந்து "பேரன் பிறந்தானா"? என்றோ "பேத்தி பிறந்தாளா?" என்றோ ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள். இதே கேள்வி திருப்பித் திருப்பி வீட்டிற்குவரும் ஒவ்வொருவராலும் கேட்கப்படுகிறது. குழந்தை பிறந்ததாகக் "கேள்வி"ப் பட்டுத்தான் அவர்களும் வந்து கேட்கிறார்கள். பதிலைத் தெரிந்துகொண்டே கேள்வியைக் கேட்டாலும் கேட்க வேண்டியது சம்பிரதாயமாகக் கருதப்படுகிறது. இனி அந்தக் குழந்தையின் வாழ்க்கை முழுவதும் கேள்விமயம்தான்! பேசத் தெரிந்தவுடனேயே குழந்தை தாய் தந்தையரைக் கேள்வி கேட்க ஆரம்பித்து விடுகிறது. விடையளிக்கக்கூடிய கேள்விகள், விடையளிக்கக்கூடாத கேள்விகள், விடையளிக்க முடியாத கேள்விகள் இவ்வாறு பல கேள்விகளைக் குழந்தைகள் கேட்கின்றன.



"......பேரன் பிறந்தானா ?" என்றோ "பேத்தி பிறந்தாளா ?" என்றோ ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள்......

பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கத் தொடங்கியதும் பிள்ளைகள் கேள்விகளுக்கு மத்தியிலேதான் வாழ வேண்டும். உபாத்யாயர்களின் கேள்விகள் சில சமயம் பிள்ளைகளைப் பெஞ்சியின்மேல் ஏற்றிவிடுகின்றன அல்லது பிரம்படிகளைத் தருவித்துக் கொடுக்கின்றன. இந்ததண்டனைகளுக்குக் காரணம் தப்பான விடைகள்தான் என்றாலும் அந்த விடைகளுக்குக் காரணம் கஷ்டமான கேள்விகள் தானே! பள்ளிக்கூட வாழ்க்கை முழுவதும் பையன் கேள்விகளாலேயே துன்புறுத்தப்படு

கிறான். வகுப்புகளில் நேரில் கேட்கப்படும் கேள்விகள், பரீட்சைகளில் அச்சடித்துக் கேட்கப்படும் கேள்விகள், வீட்டிற்கு வந்தால் "கணக்கில் என்னடா மார்க்கு?" என்று கேட்கப்படும் கேள்விகள் இவ்வாறு கேள்விகள் மாறிமாறி பையனைத் தாக்குகின்றன. இந்தக் கேள்விகளை அவனால் விட்டுத் தொலைக்கத்தான் முடியுமா? ஒருநாளும் முடியாது! அதற்குமாறாக அவன் கேள்விகளையே தேடித் தேடி அலைகிறான். சென்ற பத்து வருஷத்திய பரீட்சைகளில் கேட்கப்பட்ட கேள்விகள் என்ன? என்று பழைய கேள்வித் தாள்களைச் சேகரிக்கிறான். பழைய கேள்வித்தாள்களைத் தேடி அலைவதைவிட வரப்போகும் கேள்வித்தாள்களைச் சம்பாதிப்பது நலம் என்று கருதிச் சில பையன்கள் அச்சாபீஸ்களைச் சுற்றியலைகிறார்கள்!



"........பேசத் தெரிந்தவுடனேயே குழந்தை தாய் தந்தையரைக் கேள்விகேட்க ஆரம்பித்து விடுகிறது........"

படிப்பெல்லாம் முடிந்து வாழ்க்கையைத் தொடங்கினால் அப்பொழுதும் கேள்விகள் விட்டபாடில்லை. பெரிய அரசாங்க வேலைகளுக்குப் போகவேண்டுமானால் மறுபடியும் கேள்வித் தாள்கள் தான். அந்தக் கேள்வித்தாள்களைச் சமாளித்துத் தேறிவிட்டால் பிறகு ஒரு "கமிட்டியின்" முன்பாக வாயால் கேட்கப்படும் கேள்வித் தாக்குதல்களைச் சமாளிக்கவேண்டும்! அங்கு, "பிரெஸில் தேசத்து பிரதம மந்திரி யார்?" என்று கேட்கலாம்; அல்லது "தென்னிந்திய ரயில்வேயில் ஒரு வருஷத்தில் டிக்கெட் கலெக்டர்களால் கத்தரித்தெறியப்படும் முக்கோணமான டிக்கட் துண்டுகளை நீளமாக வரிசையில்வைத்தால் எவ்வளவு பர்லாங்குகள் இருக்கும்?' என்று கேட்கலாம். எந்தத் துறையில் வாழ்க்கையைத் தொடங்கினாலும் கேள்வியைச் சமாளித்துத்தான் ஆகவேண்டும். சட்ட சபையில்புகுந்தாலோ அங்கு கேள்விகளைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. பெரிய தலைவராகி மேடைகளிலேறிப் பிரசங்கம் செய்தால் அங்கும் கேள்வித்தாள்களை விநியோகிக்கிறார்கள். தக்க ஆதாரமின்றி வதந்தியின் மூலம் கிடைத்த செய்தியைப் பத்திரிகையில் வெளியிட விரும்பினால் பத்திரிகைக்காரர்கள் அந்தச் செய்தியை ஒரு கேள்வியாக அமைத்துக் கொட்டை எழுத்துகளில் அச்சடித்து ஒரு பெரிய கேள்விக் குறியையும் போட்டுவிடுவார்கள்.

கல்யாணம் செய்யப்படுமுன் பெண் வீட்டாரும், பிள்ளை வீட்டாரும் ஒருவருக்கொருவர் சரமாரியாகக் கேள்விகளை விடுக்கிறார்கள். "பெண்ணுக்குப் பாடத்தெரியுமா?" பரத நாட்டியம் தெரியுமா?" எவ்வளவு படித்திருக்கிறாள்?" "பெண்ணின் தகப்பனார் எவ்வளவு ரூபாய் செலவுசெய்யத் தயாராக இருக்கிறார்?" என்று பிள்ளைவீட்டார்கள் கேட்கிறார்கள். பெண் வீட்டாரோ "பிள்ளைக்கு வேலையாகிவிட்டதா?" 'முதல் கல்யாணம் தானா?" என்ன வயது? "எவ்வளவு ஆஸ்தி?" கூடப் பிறந்தவர்கள் "எவ்வளவு பேர்கள்?" கல்யாணம் ஆனால் குடித்தனம் செய்ய வீடு பார்த்துப் பிடிக்கப் பையனுக்குத்திறமையுண்டா' என்று பல கேள்விகளைப் போடுகிறார்கள்.

"......இன்ஷியூரன்ஸ் செய்யப்போனால்......"

இன்ஷியூரன்ஸ் செய்யப்போனால் முதலில்

ஒரு கேள்வித்தாளைத் தான் கொடுக்கிறார்கள். "உமக்குக் குடிப்பழக்கம் உண்டா?" "உம்முடைய மூதாதையர் யாருக்கேனும் பைத்தியம் பிடித்ததுண்டா? தகப்பனார் என்ன வியாதியால் எத்தனை வயதில் இறந்தார்?" என்பதுபோன்ற பல கேள்விகள். கடைசியில் மனிதன் இறந்து விட்டால் வார்சுகளை பந்து மித்திரர்கள் "பெரியவர் காரியம் ஆயிற்றா?" என்று கேட்கிறார்கள். சிலர், "இன்ஷியூரன்ஸ் செய்திருந்தாரா!" "எவ்வளவு ஆஸ்தி வைத்திருக்கிறார்?" என்று கேட்கிறார்கள்.

இதற்குப் பெயரே "துக்கம் கேட்பது" என்பதுதான்!

இந்தக் "கேள்வி" சமாசாரம் இன்றைய நேற்றைய சங்கதியல்ல. தொன்று தொட்டு வந்தது. நச்சுப் பொய்கையின் நீரையருந்தி மாண்டு போன பாண்டு புத்திரர்கள் நால்வரையும் உயிர்ப்பிக்கச் செய்வதற்கு யுதிஷ்டிரன் பல சிக்கலான கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியிருந்தது. தன்னை மணக்க வந்த அரசிளங்குமாரர்களை கேட்டுவிட்டு அவைகளுக்கு விடை கூற முடியாததால் 999 ராஜகுமாரர்களின் தலைகளை வெட்டியெறிந்த ராஜகுமாரியின் கதையை நாம் கேட்டிருக்கிறோம். ஏதாவது வழக்கில் சாட்சியாக மாட்டிக் கொண்டுவிட்டாலோ காதுகள் மாத்திரமல்ல சரீரம் முழுதும் இருதரப்பு வக்கீல்களின் கேள்விகளாலும் துளைக்கப்பட்டு விடும். சில அசம்பாவிதமான கேள்விகளும் கேட்கப்படலாம்.




"...டாக்டர்களிடம் போனால்..."

பொதுவாகக் கேள்விகளைத் தமிழ் நூல்களில் "அறிவினா" "அறியாவினா" "ஐயவினா" என்று மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த மூன்று வகைக் கேள்விகளைத்தவிர நடைமுறையில் இன்னும் பலவகை கேள்விகள் கேட்கப்படுகின்றன. தீபாவளியன்று "கங்காஸ்நானம் ஆச்சா?" என்று கேட்கப்படும் கேள்வியும் "கொட்டாப்புளி" போல் எதிரே நடந்துவருபவரை "சௌக்கியமா?" என்று கேட்கப்படும் கேள்வியும் சம்பிரதாய வினாக்கள்! பருமனாக இருப்பவரைச் சுட்டிக் காட்டி "இவர் எந்தக்கடையில் அரிசி வாங்குகிறார்?" என்று கேட்கப்படும் கேள்வியை "கிண்டல் வினா" என்று கூறலாம். மூட்டை முடிச்சுகளுடன் ரயிலில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்து 'ஊருக்குப் போகிறீர்களா?" என்று நண்பர்களால் கேட்கப்படும் கேள்வியை 'அசட்டுவினா' என்று கூறமுடியுமா! வேறு என்னதான் கேட்பது! "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டால்தான் அபசகுனமாயிற்றே!

டாக்டரிடம்போனால் அவர் நம் உடல் நிலையைத் தெரிந்துகொள்வது பெரும்பாலும் கேள்விகளினாலேயேயன்றி தேகபரிசோதனையினால் அல்ல. சிட்டாட்டத்தில்கூட முதலில் "கேள்வி என்ன?" என்றுதான் கேட்க வேண்டியிருக்கிறது! கேள்விகள் நம்மை விட்டாலும் நாம் கேள்விகளை விடத் தயாராக இல்லை. "ஏன்! நியாயம்தானே?" இது ஒரு கேள்வி! வாழ்க கேள்விகள்!!

## அட்டைப்படம்

**க**லைமகளாகவும், அலைமகளாகவும், மலைமகளாகவும் வெவ்வேறு நாமதேயங்களுடன் திகழும் தேவி, மூன்றும் ஒன்றாகி அன்னை பராசக்தியாகவும் தரிசனம் தருகிறாள் இந்த நவராத்திரியில் அத்தைவமாதா கொலுவீற்றிருக்கிறாள். இதையடுத்துவரும் சரஸ்வதிபூஜையை நாம் எவ்வளவு பக்தி சிரத்தையோடு கொண்டாடுகிறோமோ அதேமாதிரி வட இந்தியாவிலும் இப் பூஜையை மிகவும் விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள்.

அறியாமையகன்று, ஞான ஒளி வீசவேண்டுமென்று, தாமரைப்பூவிலிருந்து சுருதியை உரைத்த ஸரஸ்வதிதேவியைத் துதித்தும் இந்தப் புனிதமான நாளில் இவ்விதழின் அட்டையில் அவளது திருவுருவப்படத்தைப் பிரசுரித்திருக்கிறோம். அத்துடன் இவ்விதழின் நடுவே **"ஸரஸ்வதி தேவியின் புகழ்"** என்ற தலைப்பில் தமிழ் நாட்டுக் கவியரசர் பாரதியார் இயற்றியுள்ள பாடலை சித்திரங்களோடு வெளியிடுகிறோம். ஸரஸ்வதி தேவியைப்பற்றிய பாடலாதலால் "ஸரஸ்வதி" ராகத்திலேயே அதை ஸ்வரப்படுத்தி மெட்டுக்கொடுத்திருக்கிறார் வித்வான் ஸ்ரீ செம்மங்குடி.



சென்ற 2-ந்தேதியன்று சென்னை நகரில் பிரதம மந்திரி ஸ்ரீ ஓமந்தூர் ராமஸ்வாமி ரெட்டியார் கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் மதுவிலக்குத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து பேசினர்.



மதுவிலக்கு அங்குரார்ப்பணதின விழாவன்று மாஜி குடியர்களுக்கு பிரதம மந்திரி பால் வழங்குகிறர்.

# கதலீபுரநாடகம்



எஸ். ஜே.

## அத்தியாயம் 1

மேற்கு வானம் செக்கச் செவேலென்று ஜோதி மயமாகப் பிரகாசித்தது. இளந் தென்றலினால் காவிரியாற்றின் கரையிலிருந்த பச்சைப் பசும் மரங்கள் மெல்ல அசைந்தாடின. எங்குபார்த்தாலும் வெண் மணல் பரப்பு. இளம்பெண்கள் ஊற்றுத் தோண்டித் தண்ணீர் எடுத்துக் குடங்களை இடுப்பில் ஏந்திக்கொண்டு ஒருவரையொருவர் பரிகாசம் செய்துகொண்டும், சிரித்து விளையாடிக்கொண்டும் சென்றுகொண்டிருந்தனர். மற்றோரிடத்தில் சிறுவர்கள் 'பலீஞ் சடுகுடு' விளையாடிக்கொண்டிருந்தார்கள். வேதாந்திகள், பைத்தியங்கள், சோகக் கதை ஆசிரியர்கள் இவர்களைத் தவிர மற்ற எவருக்கும் அந்தச் சுற்றுப்புறம் மகிழ்ச்சியூட்டாமலிருக்க முடியாது. சேகரன் மேற்சொன்ன மூன்று ரகங்களையும் சேர்ந்தவனல்ல. இருந்தாலும் அவன் சிந்தையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தான். தன்மனதிற்குச் சாந்தி ஏற்படுவதற்காகக் கையோடு "பி. ஜி. வுட்ஹவுஸின்" நவீனம் ஒன்றை வைத்துகொண்டிருந்தான். ஆனால் உலகத்தின் பிரசித்திபெற்ற ஹாஸ்ய ஆசிரியர் கூட அவனை உற்சாகப்படுத்த முடியவில்லை. அவ்வளவு தூரம் அவன் மனம் பளுவடைந்திருந்தது. வருங்காலத்தைப்பற்றிய கவலைகள் அவனுடைய உள்ளத்தைக் குலைத்துக்கொண்டிருந்தன.

இண்டர்மீடியட் பரீட்சை எழுதிவிட்டுத் தமாஷாகக் கோடை விடுமுறையைக் கழிக்கலாம் என்ற எண்ணத்துடன் சேகரன் தன் கிராமத்திற்கு வந்திருந்தான். ஆனால் தெய்வ சங்கல்பம் வேறு விதமாக இருந்தது. வாட்ட சாட்டமாக, நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து வந்த அவனுடைய தந்தை ஒருநாள் திடீரென்று மாரடைப்பினால் இறந்தார். அவனுடைய தாய் இறந்துபோனதிலிருந்து அவனுக்குக் கொஞ்சங்கூடக் கவலையில்லாமல் பார்த்துக்கொண்டு அவனிடம் அன்பும் ஆதரவுமாய் இருந்துவந்த ஒரே உறவினர் அவனுடைய தந்தை ஒருவர்தான். தனக்கு இருந்த சொற்ப ஆஸ்தியை வைத்துக்கொண்டு பையனை இதுவரை முன்னுக்குக் கொண்டு வந்துவிட்டார். இனி அவன் இருக்கிறான், போனான் என்று பார்க்க யார் இருக்கிறார்கள்? தந்தையோடு கூடப் பிறந்த சிற்றப்பா ஒருவர் இருந்தார். ஏதோ உத்யோகத்தில் இருந்து செட்டும் கட்டுமாகப் பணம் சேர்த்து கொஞ்சம் பணத்தெம்பு வந்த பிறகு தன் வேட்டகத்துக் கிராமத்தில் வீடு வாங்கிக்கொண்டு அங்கேயே குடியேறிவிட்டார். "மனிதன் பிறக்கும்போது பணத்தோடு பிறக்கிறானே இல்லையோ, போகும்போது மட்டும் நிச்சயம் பணத்தோடுதான் போவான்" என்பது அவருடைய நம்பிக்கை. இல்லாவிட்டால் சிரம தசையிலிருந்த தன் சகோதரருக்கு அவர் உதவி செய்யாமல் இருப்பானேன்? அண்ணாவினுடைய கிருத்தியங்களுக்குமட்டும் பக்கத்திலிருந்து நடத்தி வைத்துவிட்டு அவர் ஊருக்குப் போய்விட்டார். போனவர் சந்திர சேகரனுடைய வருங்காலத்தைப்பற்றி அவனை விசாரிக்கவோ அல்லது கொஞ்சமாவது கவலை

கொள்ளவோ இல்லை. "அப்பாவினுடைய மாஸி கத்தைமட்டும் தவருமல் செய்" என்று அவனுக்குப் புத்தி சொல்லமட்டும் அவர் மறக்கவே இல்லை. சேகரனுடைய மாமா மட்டும் சேகரன் விஷயத்தில் கொஞ்சம் சிரத்தையெடுத்துக் கொண்டார். அதற்குக் காரணம் சேகரனுடைய தயவும் ஒரு காலத்தில் தனக்கு வேண்டியிருக்கலாம் என்று எண்ணிஞரோ என்னவோ!

இரண்டு கனத்த மழைத்துளிகள் விழவே சேகரன் எழுந்து வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சற்று முன் ஒரு மேகம்கூட இல்லாமல் இருந்த அதே வானம் இப்போது இருண்டிருந்தது. மேற்குத் திக்கில் பளிச் பளிச்சென்று மின்னல்கள் வீசி மறைந்தன.

சந்திரசேகரன் தன் வீட்டிற்குள் சொட்டச் சொட்ட ஈரத்துடன் நுழைந்தான். வீட்டுக் கூடத்தில் ஹரிக்கேன் லாந்தர் எரிந்துகொண்டிருந்தது. கூடத்திலிருந்த ஊஞ்சலில் சேகரனுடைய மாமாவும் எதிர் வீட்டு சுப்பய்யரும் இறந்து போனவருடைய பூஸ்திதி விவரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். (அவனுடைய மாமா இன்னும் ஊருக்குப் போகவில்லை. மருமகன் தனியாக இருக்கிருனே என்று கூடமாட ஒத்தாசைக்காக அவர் இன்னும் தங்கியிருந்தார்.)

"ஏண்டா, சேகரா! இப்படிச் சொட்டச் சொட்ட நனைந்து போயிருக்கிருயே, மழை விட்ட பிறகு வந்து சேரக்கூடாதா?" என்ருர் மாமா நடேசய்யர்.

"உங்கப்பன் இருந்தால் இதைப் பார்க்கச் சகிக்கமாட்டானேடா, குழந்தை!" என்ருர் சற்று வயதான சுப்பய்யர்.

சந்திரசேகரன் மௌனமாகக் கூடத்து மூலையைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனுடைய தந்தை தினமும் பாராயணம் செய்துகொண்டிருந்த ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் கண்ணில் தென்பட்டது. மனதில் இருந்த சோகத்தை அந்தக் காட்சி அதிகப்படுத்தியது. கண்களிலிருந்து பொல பொலவென்று நீர்த்துளிகள் விழுந்தன. மாமா சேகரனைத் தன்னருகில் அமர்த்திக்கொண்டார்.

"என்னடா அசடே! உங்க அப்பா போய்விட்டால் நாங்களெல்லாம் கைவிட்டுவிடுவோமா, என்ன? கவலைப்படாதே! பகவான் இருக்கிருர்!" என்று ஆறுதல் கூறினுர் மாமா நடேசய்யர்.

அன்றிரவு மாமாவும், மருமகனும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன் முடிவில் சந்திரசேகரன் சென்னையில் தன் மாமா வீட்டில் தங்கியிருந்து பி. ஏ. வகுப்பில் சேருவது என்று தீர்மானம் செய்யப்பட்டது. கிராமத்து வீட்டில் வேறு யாரையாவது குடிவைத்துவிட்டு, கொஞ்ச நஞ்சம் இருந்த சாமான்களை மச்சிலில் போட்டுப் பூட்டிவைப்பது என்று மாமா முடிவு செய்தார்.

மறுநாள் சாயங்காலமே சந்திரசேகரன் மாமாவோடு சென்னைக்குப் பிரயாணமானுன்.

* * * * *

நடேசய்யர் மயிலாப்பூரில் ஒரு ஷாப் வைத்திருந்தார். தம்முடைய ஜாக்கிரதையினுலும் யுத்தம் முதலிய சந்தர்ப்ப விசேஷங்களினுலும் கிட்டத்தட்ட இருபதினுயிரம் ரூபாய் ரொக்கம் சேர்த்துவிட்டார். அவரிடம் படித்தவர்கள் யாராவது பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தால்சரி, உடனே, "நீங்களெல்லாம் என்ன படிப்பு படிக்கிறீர்கள்? என்னைப் பாருங்கள, ஏதோ எழுதுவேன், படிப்பேன். கிறுக்கெழுத்து. கோணல் எழுத்து ஒன்றும் தெரியாது. ஏதோ இரண்டு சோப்பு, நாலு நெருப்புப்பெட்டி, கொஞ்சம் வெற்றிலைப்பாக்கு வைத்துக்கொண்டு ஒரு கடை வைத்தேன். இப்போ சௌகரியமாக இருக்கிறேன். பி. ஏ., எம். ஏ. படிக்கிருன்களே அவங்களுக்கு காலணு சம்பாதிக்கத் துப்பு உண்டா?" என்று உபந்யாசம் செய்ய ஆரம்பித்து விடுவார்.

மாமா இப்பொழுது ஏதோ சந்திரசேகரனிடம் பிரியமாக இருக்கிருரேயொழிய, அவருக்கும் சேகரனுடைய தந்தைக்கும் இடையே நல்லுறவு கிடையாது. உண்மையில் நடேசய்யருக்குக் கொஞ்சம் அகம்பாவமும், பணம் படைத்த மமதையும் உண்டு. இது அநேக சமயங்களில் விசேஷமாகத் தலைகாட்டும். மயிலாப்பூரில் ஒரு பெரிய மாடிவீடு கட்டிக்கொண்டிருந்தார். வீட்டிலிருந்து ஒருபர்லாங் தூரத்தில் 'மங்களம் ஸ்டோர்ஸ்' என்ற அவருடைய கடை இருந்தது. மேற்படி கடையின் பெயருக்குக் காரணமான மங்களம் அவருடைய அருமைப் புத்திரி.

மங்களத்தைப்பற்றி நடேசய்யர் பெரிய கனவுகள் கண்டுகொண்டிருந்தார். அவள் படித்துப் பட்டம் வாங்கி பெரிய வித்வாம்ஸினி ஆகவேண்டுமென்று அவர் எண்ணவில்லை. மங்களத்தை ஏதோ இரண்டு கிளாஸ் வரைக்கும் படிக்கவைத்தார். பிறகு சங்கீத டியூஷன் சொல்லிவைக்க ஒரு வாத்தியாரை அமர்த்தினுர். மங்களம் ரேடியோக்கச்சேரி செய்ய வேண்டும் என்பது அவருடைய ஆசை. ஆனுல் அவளுக்

குப் பாட்டுச்சொல்லிக் கொடுத்த வித்வான் சங்கீதத்தைத் தவிர வேறு ஏதாவது கற்றுக்கொண்டிருந்தால் அவளுக்கும் சங்கீதத்துக்கும் நன்மையாக இருந்திருக்கும் என்று எண்ணினார். நடேசய்யர் தன் பெண்ணை ஒரு பெரிய சங்கீத விதூஷியாக்கிவிட்டால் அந்த வித்வானுக்கு ரொக்கமாக ஐந்நூறுரூபாய் சன்மானம் கொடுப்பதாக ஆசைகாட்டியிருந்தார். இதனால் அந்த வித்வான் தன் உயிரைக் கொடுத்து அவளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்தார், 'மங்களம் ஸ்டோர்ஸில் நடேசய்யர் வளர்க்கும் பூனைக்குப் பாட்டுக்கற்றுக் கொடுத்தால்கூட அது இத்தனை நாட்களில் ரேடியோக் கச்சேரி செய்ய ஆரம்பித்திருக்கும்!'' என்று அவர் எண்ணினார். ஆனால் மங்களத்தின் பாட்டுக் கேட்டுக் கேட்டு அவர் தம் நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தார்.

சந்திரசேகரன் தன் மாமா வீட்டுக்கு வரும்போது தன் தாயின்நகைகளையும்கூடவே எடுத்து வந்தான். ஒரு இரட்டை வடம் சங்கிலி, ஒரு ஜோடி பொன் வளையல், ஒரு தங்கக்காப்பு, எல்லாம் சேர்ந்து மொத்த மதிப்பு சுமார் ஆயிரம் ரூபாய் இருக்கலாம். அந்த நகைகளைத் தன் மாமாவிடம் ஒப்புவித்தான். மாமா, மாமி இவர்களுடைய அந்தரங்க ஹிருதயம் என்ன என்பதை ஒருநாள் ஒட்டுக் கேட்க நேர்ந்தபோது சேகரன் தெரிந்துகொண்டான்.

"அவனுக்குத் தண்டச் சோறு போடும்படியாய் இருக்குமோ என்று நினைத்தேன். ஆனால் நல்ல வேளையாய் ஏதோ கொஞ்சம் நகை வைத்திருக்கிறான் ....'' என்றார் மாமா.

"பின்னே அதை வாங்கி என்னிடம் கொடுப்பதற்கென்னலாம்?'' என்றுகேட்டாள் மாமி.

"அவனே என்னிடம் கொடுத்து அதை வைத்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறான். அதற்காக நாம் எடுத்துக் கொண்டுவிடமுடியுமா? அவனாகவே எடுத்துக்கொள்ளச் சொன்னால் பரவாயில்லை. நாளைக்கே அவனுக்குக் கல்யாணமானால் அந்தப் பெண்ணுக்குப் போடவேண்டியிருக்குமோன்னோ?'' என்றார் மாமா.

"உங்களிடம் நகையைக் கொடுத்த விஷயத்தை என்னிடம் ஏன் சொல்லாமலிருந்தேள்? தெரியும், தெரியும்! உங்களுக்கு என்னிடம் கொஞ்சங்கூட நம்பிக்கையல்லை. என்னிடம் கொடுத்தால் என்ன? அதைத் தூக்கிப் பிறந்தாத்தில் கொடுத்துவிடுவேனே? நான் பிறந்தாத்துக்குக் கொடுத்துக் கொடுத்துத்தான் நீங்கள் மாடிவீடு கட்டினீர்களா? நான் ஏதோ செட்டும் கட்டுமாய் இருந்ததனால்தானே இந்த வாழ்வு வந்தது உங்களுக்கு! இல்லாவிட்டால் உங்கள் சாமர்த்தியத்துக்கு நீங்கள் பணம் சேர்த்திருக்க மாட்டேளா?'' என்று கால் மணி நேரம் சேர்ந்தாற்போல் விம்மல்களுக்கிடையே பேசிவிட்டுக் கண்ணீர் விட ஆரம்பித்தாள் நடேசய்யரின் மனைவி.

நடேசய்யருடைய சாமர்த்தியத்தைப் பற்றி வேறு யாராவது இதைப்போன்ற விமர்சனம் செய்திருந்தால் நடேசய்யர் அவரை அடித்து விரட்டியிருப்பார். ஆனால் விமர்சகர் அவருடைய மனைவியாதலாலும். அந்த

அம்மாளுக்குக் கோபம் வரும் தருணங்களில் நடேசய்யர் பேசாமல் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு வாசற்பக்கம் போய் விடுவது என்ற கொள்கையை விடாது அனுஷ்டித்து வந்தாலும் அவர் மௌனமாக நின்றார். பிறகு பேச்சைமாற்றி,



"இதோ பார், அசடே! அழாதே, ஜலதோஷம் பிடிச்சுடப் போறது. அப்புறம் டாக்டருக்குக் கொடுக்கணும். போன மாசமே உனக்குத் தலையை வலிச்சதுக்கே ஐம்பது ரூபாய் பில் ஆயிடுத்து'' என்றார். பண விஷயங்களில் மேற்படி தம்பதிகள் ஒரே நோக்கம் கொண்டவர்களாதலால் ஸ்ரீமதி கல்யாணி அம்மாள் அழுவதை நிறுத்திவிட்டு வீளக்குமாற்றுக் கட்டையைக் கையில் எடுத்துக்கொண்டாள். (உன்னைப் பெருக்குவதற்காகத்தான்!)

மேற்கண்ட சம்பாஷணைகளைக் கேட்டவுடன் மாமாவீட்டுக்குத் தலைமுழுகிவிட்டு வெளியேறலாம் என்றெண்ணினான் சேகரன். ஆனால் அதை நிச்சயமாய்ச் செய்யமுடியாது. அவன் இப்போதுதான் ஜூனியர் பி-ஏ, வகுப்பில் படிக்கிறான். வெளியே ஹோட்டலில் போய்ச் சாப்பிடலாம் என்றால் தந்தை வைத்துவிட்டுப் போன ஆஸ்தியைக் கரைக்க வேண்டியதுதான். இந்த இரண்டு வருஷங்களைஎப்படியாவது தாண்டிவிட்டால் பின்னால் கவலையில்லை. ஒரு சமயம், "எதற்காக மேலே படிக்கவேண்டும்? படித்தவர்களெல்லாம் என்னத்தைச் சாதித்துவிட்டார்கள்!'' என்றெண்ணினான். மற்றொரு சமயம் அந்த இரண்டெழுத்துப் பட்டம் வாங்கிக்கொண்டால்தான் தன் தந்தையின் ஆத்மா சாந்தியடையும் என்றெண்ணினான்.

கோபதாபங்களையெல்லாம் ஓதுக்கிவிட்டுப் பார்த்தால் அவன் செய்யக்கூடிய காரியம் இதுதான்:—ஹோட்டலில் இருந்து சாப்பிட்டுக்கொண்டு காலேஜ் சம்பளமும் கட்டிக்கொண்டு படிப்பது அவனுடைய சக்திக்கு அப்பாற்பட்டது. அவனை அன்புடன் ஆதரிக்க வேறு எந்த உறவினரும் இல்லை. ஆகவே எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு மாமா வீட்டில் இருந்து தன் லட்சியத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். சுயகௌரவத்தையெல்லாம் இப்போது பார்க்கக்கூடாது. ஆனால் கூடியமட்டும் தான் சாப்பிடும் சோற்றுக்குத் தகுந்த வேலை செய்யவேண்டும். (தொடரும்)



# துன்பமும் இன்பமும்



கோமதி ஸ்வாமிநாதன்

சாப்பண்ணு வீட்டுத்திண்ணையில் வழக்கம்போல் இரவு எட்டு மணிக்கு வம்பர் மகாசபை கூடுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. சாம்பு வாய் நிறைய வெற்றிலை புகையிலையைக் குதப்பிக்கொண்டு வழவழ குழகுழ என்று ஒரே'ழ' காரப்பிரயோகம் செய்துகொண்டு வந்துசேர்ந்தான். அவன் வந்த சில நிமிஷங்களுக்குள்ளாகவே கட்டைக் கிட்டுவும், குப்புசாமியும் வந்துசேர்ந்தார்கள். அப்போதுதான் சாப்பிட்டுவிட்டு தொந்தியை தடவிக்கொண்டு உள்ளிருந்து வந்த சுப்பண்ணு எல்லோரையும் வரவேற்கும் பாவனையாக தலையை ஆட்டிவிட்டு தூணில் சாய்ந்தவாறே உட்கார்ந்தார்.

சங்கராபுரம், கிராமத்திலும், நகரத்திலும் சேராத நடுவாந்திர ஊர். நாலுமைல் தூரத்திலுள்ள நகரத்தின் நாகரிகக்காற்று இன்னும் அங்கு அடிக்க ஆரம்பிக்கவில்லை. சங்கராபுரவாசிகள், புதுமையையும் முன்னேற்றத்தையும் தயக்கமில்லாமல் ஏற்றுக்கொள்ளத்தயாரில்லை. நாலாவது வகுப்புவரை உள்ள ஒரு எலிமெண்டரி பள்ளிக்கூடம் ஒன்றுதான் சங்கராபுரத்தின் பொதுஸ்தாபனமாக இருந்தது. அதில் படிப்பை முடித்துக்கொண்டு மேல்படிப்பிற்கு அயலூர்போய் அந்த நாகரிகத்தைக்கொண்டுவருவதில் அவ்வூர்க்காரர்கள் சிரத்தை காண்பிப்பதில்லை.

“சுப்பண்ணு! லேட்டஸ்ட் நியூஸ்” தெரியுமோ? என்று பேச்சைத்துவக்கினான் கிட்டு தன்னுடைய பிரத்யேகமான மணிப்பிரவாள நடையில். கிட்டுவிற்கு வேலை ஒன்றும் கிடையாது. கொஞ்சம் சொத்து உள்ளவன். அடிக்கடி நகரத்திற்குப்போய் வருவான். அநேகமாக கிராமத்திற்கு புது சமாசாரம் கொண்டு வருபவன் அவன்தான்! ஆகையால் அவன் லேட்டஸ்ட் நியூஸ் என்றதும் எல்லோரும் காதுகளை தீட்டிக்கொண்டார்கள். என்னடா! மறுபடியும் ஏதேனும் சண்டை வந்துவிட்டதா?” என்றார் சுப்பண்ணு ஆவலுடன். “அதெல்லாமில்லை! நம்ப பிச்சுமணி பெண் பார்வதி சினிமாவிலே சேர்ந்து ஆடப்போனாளாம்! கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதில்லையாம்!” என்றான். வெற்றிலையைத்துப்பிவிட்டு மடமடவென்று சிரித்தான் சாம்பு. அதைத்தொடர்ந்து “அடிசக்கை! இனிமேல் நாமெல்லாம் இலவசமாக சினிமாப் பார்க்கலாமென்று சொல்லு! என்றான். சாம்பு பிசுநாரித்தனத்திற்குப் பேர் போனவன். லட்சக்கணக்கில் பணமிருந்தும் காலணா சாதகமாக சாமான் வாங்க காதவழி நடக்கக்கூசமாட்டான். இவ்வளவு நாழி மௌனமாக இருந்த குப்புசாமி கோபமான குரலில் ஆரம்பித்தார். “அடமண்டு! நம் ஆசாரத்திற்கும் பெருமைக்கும் அழிவைத் தேடுகிறாளே என்று கொஞ்சங்கூட வருத்தப்படாமல் இலவச சினிமா பார்க்கலாமே என்று பல்லை இளிக்கிறாயே! இது கிராமத்திற்கே அவமானமில்லையா? சங்கராபுரத்துப்பெண்ணு சந்தி சிரிக்க ஆடுகிறாளென்றால் நாமெல்லாம் நாக்கைப் பிடுங்கிக்கொள்ளவேணுமடா! காமாட்சிபுரம் மிட்டாதாருக்கு அந்தப்பெண்ணைக் கட்டிப்போட்டுடு! ஐம்பதுவயது ஒரு வயதா? என்று முட்டிக்கொண்டேன். அந்தக் குட்டி சம்மதிக்கவில்லை என்பதற்காக அந்தசம்பந்தத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டான் பிச்சுமணி. வேம்பத்தூர் மிட்டாதாருக்கு ஒரு கால் சற்று கோணியிருந்தால் என்ன? நாலுவில் வண்டிவைத்து அடிக்கிறாரே! அவருக்காவது கொடடா என்று கெஞ்சினேன்! கொடுக்க மறுத்துவிட்டான். ஒரு தம்பிடி வரதட்சிணை கொடுக்க முடியாதவனுக்கு இருபது வயது மன்மதனா மாப்பிள்ளையாய் வருவான்? அந்தப் பெண்ணை அடக்கத் தெரியாத பயல் அவளை கூத்தாடியாக வேறு ஆக்கப் போகிறானே? சுப்பண்ணு! நீர்தான் இதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். பிச்சுமணியைக் கூப்பிட்டு நல்ல புத்தி சொல்லிப்பாரும். கேட்கமாட்டேனென்றால் அவன் முதலில் இந்த ஊரை விட்டுக் கிளம்பட்டும்! வேறு ஊரிலிருந்து அவள் எக்கேடு கெட்டுப்போனாலும் சரி, சங்கரா

புரத்திற்கு அந்த அபக்கியாதி வேண்டாம்!''

குப்புசாமி தன் உணர்ச்சி மிகுந்த பிரசங்கத்தை நிறுத்தினார். அதைத்தொடர்ந்து ஓர் நீண்ட மௌனம் நிலவியது. சிறிதுநேரம் கழித்து சுப்பண்ணா தொண்டையைக் கனைத்துக் கொண்டு "ஆமாம்! குப்புசாமி சொல்வது ரொம்பசரி. ஊர்க்காரர்கள் நாலுபேரை பஞ்சாயத்து வைத்து இந்த விஷயத்தை தீர்த்துக்கட்டவேண்டியதுதான்! சம்பிரதாயம், பழக்க வழக்கம் இவைகளை கைவிடாமல், தன் பெண்ணை யாருக்கும் கன்னிகாதானம் செய்துகொடுத்தால் பிச்சுமணி இந்த ஊரிலேயே இருக்கட்டும். இல்லாவிட்டால் குடும்பத்தோடு குடிசையைக் கிளப்பிக்கொண்டு எங்காவது போகவேண்டியதுதான்'' என்றார். பிறகு பேச்சு வேறு விஷயங்களை நோக்கித்தாவிற்று.

பிச்சுமணியின், தகப்பனார், பாட்டனார் எல்லோருமே பரம்பரையாக சங்கராபுர வாசிகள் தான். பிச்சுமணியின் குடும்பம் பரம ஏழைக் குடும்பம். தரித்திர நாராயணனின் பூர்ண கடாட்சம் அங்கு தானிருந்தது. போதாக்குறைக்கு ஏழெட்டுப் பெண் குழந்தைகள், மூத்தவள் தான் பார்வதி. அப்ஸரஸ்போல் அழகானவள். சேற்றில் மலர்ந்த செந்தாமரை. பிச்சுமணி ஏதோ தான் கற்றிருந்ததை சிறு பிள்ளைகளுக்கு பிரைவேட் டியூஷன் சொல்லிக்கொடுத்து அதில் வரும் வரும்படியை வைத்து தன் பெரிய குடும்பத்தை பட்டினியால் வாடாது காப்பாற்றி வந்தார்.

பார்வதி எவ்வளவோ அழகாக இருந்தாலும் அவள் தகப்பனார் வரதட்சிணை கொடுக்க சக்தியில்லாதவர் என்பதற்காக வாலிபர்கள் ஒருவரும் அவளை மணக்க முன் வரவில்லை. அவளை விவாஹம் செய்துகொள்ளச் சம்மதித்த இரண்டொரு அறுபது ஐம்பது வயது யுவர்களை பார்வதி கண்டிப்பாய் மணம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள். கடைசியில் அவளால் குடும்பமாவது கஷ்டத்திலிருந்து விடுபடட்டும் என்ற நோக்கத்துடன், பட்டணத்திலுள்ள தன் மாமா பையன் மூலமாக பார்வதியை சினிமாவில் நடிக்கச் செய்யலாம் என்ற முடிவிற்கு வந்தார். ஊர்க்காரர்கள் இதை எதிர்ப்பார்கள் என்று அவருக்குத் தெரியும். ஆனால் அவர் பசிக்கு அஞ்சியது போல் அவர்களுக்கு அஞ்சவில்லை. கஷ்டத்திற்குப் பயப்பட்டது போல் அவர்களுக்குப் பயப்படவில்லை.

சுப்பண்ணா, குப்புசாமி, முதலியோர் எல்லோரும் வந்து அவரை அதட்டி மிரட்டினார்கள். கண்காணாத வேறு ஊருக்குப் போகும்படியாவது அதிகாரம் செய்தார்கள். பிச்சுமணி கொஞ்சம்கூட நெஞ்சம் தளரவில்லை. "நான் கஷ்டப்படும்போது நீங்கள் ஒருவரும் உதவி செய்ய முன் வரவில்லை. என்கஷ்டம் விடியாதா என்றிருக்கும்போது, என்னை ஊரைவிட்டே விரட்டப்பார்க்கிறீர்கள். இந்த ஊரின் கண்யத்திலும் பெருமையிலும் உங்களுக்கு எவ்வளவு அக்கரை இருக்கிறதோ அவ்வளவு அக்கரை எனக்கும் இருக்கிறது'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

ஒரு நல்லநாளில் பார்வதியை சென்னைக்கு அழைத்துக்கொண்டு போய் கண்யமான ஓர் ஸ்டுடியோவில் திருப்திகரமான சம்பளத்திற்கு ஒரு எக்ஸ்ட்ரா நடிகையாக அமர்த்திவிட்டு, அவள் பயமின்றி வசிப்பதற்கும் ஏற்பாடு செய்துவிட்டு ஊருக்குத் திரும்பினார் பிச்சுமணி. அந்த நல்ல நாளிலே சம்பிரதாயத்தைவிட்டு எள்ளளவும் பிறழ விரும்பாத சங்கராபுர சமுகம் அவரையும் அவர் குடும்பத்தையும் சமூக பகிஷ்காரம் செய்தது. அவரிடம் டியூஷன் வைத்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள்கூட ஒவ்வொருவராக நின்று கொண்டார்கள். பார்வதி அனுப்பிவைக்கும் அற்ப தொகையை வைத்துக்கொண்டு மனம் கலங்காமல் சம்சார சாகரத்தில் நீந்திவந்தார் பிச்சுமணி.

## 2

காலசக்கரம் சுழன்றுகொண்டே இருந்தது. பார்வதி நடிகையாக எண்ணியவேளை நல்லவேளையோ என்னவோ! நான்கைந்து வருஷங்களில் அவள் நட்சத்திரபதவியை அடைந்துவிட்டாள். நட்சத்திரம் என்றால் சாதாரண நட்சத்திரமல்ல! லக்ஷ ரூபாய்வாங்கும் பிரபல நட்சத்திரமாக விளங்கினாள். பார்வதி தன் பெயரை பார்வதிதேவி என்று வைத்துக்கொண்டதோடல்லாமல் ஊர் பெயரையும் சேர்த்து சங்கராபுரம் பார்வதிதேவி என்று வைத்துக் கொண்டாள். அவள் அழகும் நடிப்பும் படம் பார்ப்போர்களின் மனதை ஒரே கலக்கு கலக்கி சித்தப்பிரமையடையும்படி செய்தது. அவள் பெயர் படங்களுக்கு அபார மதிப்பை அளித்ததோடல்லாமல் சங்கராபுரத்திற்கும் மகத்தான பெருமையை அளிக்கஆரம்பித்தது. சினிமா விசிறிகளும், ரசிகர்களும் சங்கராபுரத்தை சினிமா சரித்திரத்திலேயே பிரசித்தமான யாத்ரா க்ஷேத்திரம் என்று நினைக்க ஆரம்பித்தார்கள்!

இந்த நாலைந்து வருஷங்களில் சங்கராபுரத்திலும் பிரமாதமான மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. கொஞ்சம் கொஞ்சம் புதுமையும் நாகரிகமும் தலைகாட்டின. பிச்சுமணியின் ஓட்டைவீடு மாயமாய் மறைந்து அது இருந்த இடத்தில் இப்போது பிருமாண்டமான மூன்றடுக்கு பங்களா ஒன்று கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது.

பங்களாவின் காம்பௌண்டில் புத்தப்புதிதான அழகிய கார்கள் இரண்டு எப்போதும் தயாராய் நின்றுகொண்டிருந்தன. பார்வதியின் தங்கை சரஸ்வதியை ஒரு ஐ. சி. எஸ். காரரும் மற்றொரு தங்கை விசாலத்தை ஒரு பிரபல அட்வகேட்டும் ஒரு பைசா வரதட்சிணை வாங்காமல் விவாகம் செய்துகொண்டிருந்தார்கள். ஊரிலேயே முதல் பிரமுகராக விளங்கிய பிச்சுமணியிடம் இப்போது சுப்பண்ணா, குப்புசாமி எல்லோரும் அபாரமரியாதையுடனும் பயபக்தியுடனும் பழகினார்கள். "பார்வதி அந்த நாளிலேயே மகா சூடிகை! மகாலட்சுமி! அவள் புகமுக்கும் அதிருஷ்டத்திற்கும் கேட்பானேன்'' என்று ஒரு நாளைக்கு நூறுதரம் சொல்வார் குப்புசாமி. பிச்சுமணிக்குப் பணத்தினால் கர்வம் வந்துவிடவில்லை! எப்போதும் போல்தான் இருந்தார்.

## 3

திடீரென்று ஒரு நாள் சங்கராபுரம் தேவேந்திரபட்டணம்போல் விளங்கியது. ஆங்காங்கு தோரணங்களும், வாழை மரம் கட்டப்பட்ட ஆர்ச்சுகளும் ஊருக்கே பெரிய சோபையைக் கொடுத்துக் கொண்டிருந்தது. சங்கராபுரமே

உற்சாகத்தினால் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது.

மாலை ஐந்துமணிக்கு ஊரின் மத்தியில் புதிதாகக்கட்டப்பட்டிருந்த ஓர் நவீன ஹாலின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பிரும்மாண்டமான கொட்டகையில் உள்ளூர்ப்பிரமுகர்கள், அயலூர்ப்பிரமுகர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். நாதஸ்வர சப்தம் ஒலித்து ஓய்ந்தது. கொட்டகையின் ஓர் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பிரபல நட்சத்திரம் பார்வதிதேவி அமர்ந்திருந்தாள். கூட்டத்தினர் கண்களெல்லாம் மேடைமீதுதான் பதிந்திருந்தன. ஒலிபரப்பியின் முன் நின்றுகொண்டே சுப்பண்ணா பேச ஆரம்பித்தார். "சபையோர்களே! இன்று ஓர் சுப தினம். சங்கராபுரத்தின் சரித்திரத்திலேயே, பொன்னால் பொறிக்கப்படவேண்டிய நாள்—'ரெட் லெட்டர் டே! நம் ஊருக்கு என்றும் அழியாப்புகழைத்தேடித் தந்திருக்கும், நம் ஊர் நட்சத்திரம், திரை உலக திலகம் பார்வதி தேவியின் பெயரால், ஸ்ரீமான் சாம்பு எழுப்பியிருக்கும் இந்த நகர மண்டபத்தை சாக்ஷாத் பார்வதிதேவியே வந்து திறப்பு விழா நடத்துவது, ஓர் அபூர்வத்திலும் அபூர்வமான சம்பவம். தேவி அவர்கள் இடைவிடாத அலுவல்களுக்கிடையே இங்கு வந்திருப்பது நாம் கனவிலும் நினைக்க முடியாத காரியம். பார்வதிதேவி அவர்களை இவ்வுலகிற்களித்த ஸ்ரீமான் பிச்சு மணி அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். ஸ்ரீமான் பிச்சுமணியும், ஸ்ரீமதி பார்வதிதேவியும் அவர்கள் குடும்பத்தினரும் நீடூழி வாழ்ந்து என்றென்றைக்கும் நம் சங்கராபுரத்திற்கு வற்றாத பெருமையை அளித்துக்கொண்டிருக்க வேண்டும். இப்போது உங்கள் சார்பில், ஸ்ரீமதி பார்வதி தேவியை இந்த மண்டபத்தின் திறப்பு விழாவை நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்." என்று பலத்த கரகோஷத்திற்கிடையே சொல்லி முடித்தார். குப்புசாமி தன் பலத்த குரலில் யதேஷ்டமான மந்திரங்களைச்சொல்லி ஆசீர்வதித்தார். கிட்டு, பயபக்தியுடன் தங்கச் சாவியை எடுத்து பார்வதியிடம் அளித்தான். வெகு விமரிசையாக திறப்பு விழா நடந்தது.



பார்வதி பவனத்தின் படங்களும் அதன் திறப்பு விழாச் செய்திகளும் பத்திரிகைகளில் பல நாள் வரை வெளி வந்தன. பார்வதி சென்னைக்கு திரும்பியபோது சுப்பண்ணா, சாம்பு இருவரும் சென்னை வரையிலுமே அவளை வழியனுப்ப வந்தார்கள்!

## 4

"என்ன சுப்பண்ணா! கலாமோகினி என்ற படத்தைப் பார்த்தீர்களோ? அதில் நம் பார்வதி தேவி என்ன ஜோராய் நடித்திருக்கிறாள் தெரியுமா?" என்று கேட்டுக்கொண்டே சாம்பு வந்தான். "நன்றாய் பார்க்காமலிருந்தேனே! முதல் நாள் முதல் ஆட்டம் பார்த்தாய் விட்டது. பிரமாதம்! ஏழைப் பெண்ணாக எவ்வளவு உணர்ச்சி ததும்ப நடித்திருக்கிறாள்! எனக்கு கண்ணிலே ஜலம் வந்துவிட்டது" என்றார் சுப்பண்ணா.

"வாழ்க்கையை அப்படியே சித்தரித்திருக்கிறாள்! நாமே அவர்கள் குடும்பத்தை படாதபாடு படுத்தி வைக்கவில்லையா? துன்பப்படுத்தவில்லையா? பாவம்!" என்று சொல்லிக் கொண்டே குப்புசாமி வந்து சேர்ந்தார்.

"அதற்குப் பிராயச்சித்தமாகத்தான் இப்போது அவளை வானளாவப் புகழுகிறோமே! நம்மனதை காலம் மாற்றிவிட்டது. நாம் பயமுறுத்தியதைக்கண்டு பிச்சுமணி பார்வதியை திரை உலகிற்கு விடாமலிருந்தால் நம் ஊருக்கு இவ்வளவு பெருமை ஏற்பட்டிருக்குமா?" என்றார் சுப்பண்ணா.

"துன்பத்திலின்பம் திண்ணமாயிருக்கும்" என்ற பார்வதி தேவியின் இசைத்தட்டு எங்கோ தூரத்தில் ஒலிக்க ஆரம்பித்தது!

—

# அரை வைத்தியன்

—ராதாகிருஷ்ணன்—

வைத்தியர் வைத்தியலிங்கம் ஆயிரம்பேருக்கு மேல் கொன்றிருந்தும் கூட இன்னும் அரை வைத்தியராகவில்லை! என்றாலும் அந்தக் குக்கிராமத்தில் அவரது பிரக்யாதிக்கு ஒன்றும் குறைவில்லை. வைத்தியலிங்கம் என்ற சிவபெருமானது திருநாமத்தைச் சூடிக்கொண்டிருந்த அவரும் தன்னிடம் வரும் வியாதியஸ்தர்களில் பெரும்பாலோரை ஒழுங்காகக் கைலாயத்துக்கு அனுப்பி வந்தார்—வைகுண்டம் செல்ல விரும்பினவர்களை வைகுண்டத்துக்கும் அனுப்பிவைத்தார். ஏனெனில் அவர் யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை.

ஒருநாள் வீட்டில் உட்கார்ந்து மருந்தரைத்துக் கொண்டிருந்தார் வைத்தியர். மிராசுதார் எதிராஜுலு, வைத்தியரைச் சற்றுத் தன் வீடுவரை வந்து போகச் சொன்னார் என்று வந்து கூறினான் அவரது வேலையாள். எதிராஜுலு கூப்பிடுகிறார் என்றதும் வைத்தியருக்குச் சற்றுக் கலக்கம் ஏற்பட்டது. ஏனென்றால் அவர் ஊரிலேயே பெரிய செல்வந்தர்., சற்று முன்கோபி. சாதாரணமாக அவருக்கு வைத்திலிங்க வைத்தியரின் திறமையைப்பற்றி அவ்வளவாக உயர்ந்த அபிப்பிராயம் ஒன்றும் கிடையாது. தனக்கோ தன் குடும்பத்தாருக்கோ நோய் வந்தால் கூட வைத்தியரை அழைப்பதில்லை அவர். ஒரு சிறிய பெட்டி நிறைய ஹோமியோபதி மருந்து சீசாக்களை வைத்திருந்த அவர் தம்குடும்பத்திற்குத் தாமே வைத்தியம் செய்து வந்தார் என்பது வைத்தியலிங்கம் பிள்ளையவர்களுக்கு நன்றாகத் தெரியும். ‘‘பின் ஏன் நம்மைக் கூப்பிடுகிறார்? அவர் குடும்பத்தினர் யாரேனும் நோயுற்று எக்கச்சக்கமான நிலைமையில் இருக்கிறார்களோ?'' எனச் சிந்தித்த வண்ணம் தன் ஔஷதாதிகள் சகிதம் முதலியாரவர்கள் வீட்டை நோக்கி நடந்தார் வைத்தியர்.

கூடத்தில் உள்ளும் புறமுமாக உலவிக்கொண்டிருந்த எதிராஜுலுவுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டார் வைத்தியர். அவரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ‘‘வைத்தியரே! அந்த உள்ளில் ரொம்பக் கடுமையான வயிற்று வலியினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டு படுத்திருக்கிறான் என் பையன். அவனைக் கொஞ்சம் கவனியும். இதோ பாரும். என் கடிகாரத்தில் இப்போது மணி 9-5 ஆயிற்று. 9-30 க்குள் அவனுடைய வயிற்றுவலி நின்றுவிட வேண்டும். தெரியுமா?'' என்று மிரட்டி உள்ளே அனுப்பினார் வீட்டு எஜமானர்.

வைத்தியரது உடம்பெல்லாம் வியர்க்கத் தொடங்கியது. ‘‘இதேதடா 25—நிமிஷத்தில் வயிற்று வலியை நிறுத்தியேயாக வேண்டும் என்கிறாரே! மருந்து பலிக்காவிட்டால் என்ன ஆகுமோ நம் கதி?'' என்று யோசனை செய்தார் அவர். பையனோ புழுப் போலத் துடித்துக்கொண்டிருக்கிறான் — வயிற்றை அமுக்கிக் கொண்டு. தன் குலதெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொண்டு மருந்து டப்பாவைத் திறந்து ரத்தம்போல் சிவந்திருந்த ஒரு செந்தூரத்தை எடுத்தார் வைத்தியர். அதைத் தேனில் குழைத்து வெற்றிலையில் தடவிக் கொடுத்தார் பையனிடம். அவனும் அதை நக்கத் தொடங்கினான். படபடக்கும் உள்ளத்தோடு தன் மருந்தின் பலனைக் கவனித்து நின்றார் வைத்தியர். சில நிமிஷங்கள் கடந்தன.

பையனது அவஸ்தை சற்றுக் குறைவதுபோல் காணப்பட்டது. சிறிது நேரத்தில் படுக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்தான் பையன். அப்புறம் எழுந்து நின்று வைத்தியரின்மேல் ஒரு பார்வையைச் செலுத்தினான். அடாடா! அந்தப் பார்வையில் கலந்திருந்த வெறுப்பையும் துவேஷத்தையும் என்னவென்று வர்ணிப்பது! ஆனால் அவன் தன் வாயைத் திறந்து ஒன்றும் பேசவில்லை. நேரே சென்றுமேஜைமேல் வைத்திருந்த இரண்டொரு புத்தகங்களை எடுத்துக்கொண்டு அறைக்கதவைத் திறந்துகொண்டு வேகமாக வெளியேறினான்.

பையனின் இந்த மரியாதையற்ற நடத்தையைப்பற்றி வைத்தியர் சற்று எண்ணினார். ‘‘சீ சீ! இந்தப் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளே இப்படித்தான். நான் மருந்து கொடுத்து இவன் வயிற்று வலியை நிறுத்தியிருக்கிறேன். இவன் என்னடா என்றால் நமக்கு ஒரு கும்பிடுகூடப் போடாமல் போகிறான், போதாததற்கு முறைத்து வேறு பார்க்கிறான்.'' என்று அவர் நினைத்துக்கொள்ளும் போதே அறையினுள் நுழைந்தார் முதலியார்.

‘‘ரொம்ப வந்தனம் வைத்தியர் ஐயா! உங்கள் உதவியினால்தான் இன்று நம் பையனைப்பரீட்சைக்கு அனுப்ப முடிந்தது,'' என்று சொல்லிக்கொண்டே வந்தார் அவர். வைத்திலிங்கம் பிள்ளையின் உச்சி குளிர்ந்தது.

‘‘இல்லிங்க எல்லாம் நம்ப பெரியவங்க தயவுதான். இந்த மருந்து இருக்குதே...இது பரம்பரையாகவே நல்ல கைகண்ட மருந்துங்க......'' என்று இளித்தார் அவர்.

‘‘வைத்தியரே. அதெல்லாம் இருக்கட்டும். மருந்து கைகண்டதோ கால் கண்டதோ, அதைச் சாப்பிட்டு என் பையனின் வயிற்று வலி குணமாகியிருக்க முடியாது. ஆனால் பாருங்கள்—நல்ல சமயத்தில் நீங்கள் வந்ததே போதும். இந்தாருங்கள்.'' என்று

ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினுர் முதலியார். கையை நீட்டி நோட்டைப் பெற்றுக்கொண்ட வைத்தியருக்கு முதலியாரது பேச்சின் தாத்பர்யம் விளங்கவில்லே. எனவே அவர் முகத்தை நோக்கியபடி அசட்டு விழி விழித்தார். "என்ன நான் சொல்வது புரியவில்லையா? சற்றுக் கேளுங்கள். ஆனுல் வைத்தியரே! உம்மை அவமானப்படுத்தும் நோக்கம் எனக்குக் கிடையாது. எனக்குக் காரியம் ஆக வேண்டியிருந்தது. ஆகியும் விட்டது. உமக்கு வேண்டியது பணம், அதுவும் கிடைத்தாயிற்று உமக்கு அவ்வளவு தானே? இனிச்சொல்வதனுல் என்ன?" என்று பிரமாத பீடிகையுடன் தொடங்கினுர் முதலியார்.

"வைத்தியரே! இவன் நமது மூத்த பையன். எஸ். எஸ். எல். ஸி. மூன்ருவது வருஷம் படிக்கிருன். பையன் என்னமோ கெட்டிக்காரன் தான். விஷயம் தெரிந்தவன்தான். உம் விஷயமும் உம் மருந்து வகைகளின் விஷயமும் கூட அவனுக்கு நன்ருகத் தெரியும். (இவ்விடத்தில் வைத்தியரின் முகத்தில் களை சொட்டியது) ஆனுல் பாருங்கள். படிப்பில் மாத்திரம் இவனுக்கு மனம் செல்லவில்லை. நீங்களே பாருங்கள். போன கால் வருடப் பரீட்சையின்போது சுரம் என்று சொல்லிக் கொண்டு படுத்து விட்டான். அரை வருஷப் பரீட்சையின்போதோ வாதம் வந்துவிட்டது என்றுன். பரீட்சைக்கும் போகவில்லை. இப்பொழுது மறுபடியும் வருஷாந்தரப் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் 'வயிற்று வலி' என்று சாக்குச் சொல்லிக்கொண்டு மட்டம்போடப் பார்க்கிருன்......என்றுர் முதலியார். "ஓஹோ!" என்றுர் வைத்தியர். அவருக்கு விஷயம் கொஞ்சம் புரியத் தொடங்கிற்று.

"நானும் ஹோமியோபதி மாத்திரைகளையெல்லாம் கொடுத்துப் பார்த்தேன். ஊஹூம். அது நிஜமான வயிற்று வலியாக இருந்தால்தானே அதை மருந்து குணப்படுத்தப் போகிறது? பையன் பாசாங்கு செய்கிருனென்பதுதான் எனக்கு முதலிலேயே தெரிந்துவிட்டதே.

"பின் ஏன் என்னை வரவழைத்தீர்கள்?"

"அதுவா? சொல்கிறேன் இருங்கள். இந்த நெருக்கடியான சமயத்தில் உங்கள் ஞாபகம் எனக்கு வந்ததே ஒரு அதிர்ஷ்டம்தான்.




உடனே ஒரு யுக்தி செய்தேன் நம் பையனுக்கு உங்களைப்பற்றி நன்ருகத் தெரியும் என்று சொன்னேனல்லவா? நீங்கள் கை வைத்த ஒவ்வொரு கேசும் அப்படி அப்படியே 'க்ளோஸ்' ஆகி விடுவதை அவன் பார்த்திருக்கிருன். எனவே, நான் வைத்தியரை அழைத்து வரச் சொல்கிறேன் என்றதும் அவன் பாவம்! கிடுகிடுத்துப் போய்விட்டான். ஆனுல் அதற்காக உடனே பாசாங்கை நிறுத்தி விட்டுப் பரீட்சைக்குப் போகமுடியுமா என்ன?"

"என் மருந்துகளிடம் அவனுக்கு அவ்வளவு பயம் என்றுல், பின் அதைக் கொஞ்சமும் தயங்காமல் சாப்பிட்டானே. நான்வெற்றிலையில் தடவிக் கொடுத்த செந்தூரத்தை நக்கிவிட்டு வெற்றிலையை அதோ எறிந்திருக்கிருன் பாருங்கள்" என்று வாதித்தார் வைத்தியர். பின் மானம் போகும் போது சும்மாவா உட்கார்ந்திருப்பார்?

சற்று எழுந்து போய்க் கீழே கிடந்த அந்த வெற்றிலையை எடுத்துக்கொண்டுவந்தார் முதலியார். "வைத்தியரே, நீர் சரியாகக் கவனிக்கவில்லை. என் பையன் மருந்தைச் சாப்பிடவில்லை என்று நான் நிரூபிக்கிறேன் பாருங்கள். அவன் தான் கெட்டிக்காரன் என்று நான் முன்பே சொல்லவில்லையா? நீர் வெற்றிலையின் மேற்புறத்திலல்லவா மருந்தைத் தடவிக் கொடுத்தீர்! அவன் நக்கினது வெற்றிலையின் கீழ்ப்பக்கத்தை. இதோ பாரும். மேற்பக்கத்தில் உம் செந்தூரம் அப்படியே இருக்கிறது என்று காட்டினுர் முதலியார். தாம் கீழே விழுந்து விடாமல் ஒரு மேஜையை இறுகப்பற்றிக்கொண்டார் வைத்தியர்.

ஆனுல் அந்தக் கடைசிக் கேள்வியையும் கேட்டுப்பார்த்துவிட்டால் என்ன?' என்று தோன்றியது அவருக்கு. "சரி இதுவரை என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன். ஆனுல் நீங்கள் சொல்கிறமாதிரி பையனுககு உண்மையிலும் வயிற்றுவலி இல்லை—மருந்தையும் சாப்பிடவில்லை என்றுல், எப்படித் தன் பாசாங்கை நிறுத்தி விட்டுப் பரீட்சைக்குப்போக மனம் வந்தது அவனுக்கு? கடைசி

வரை பாசாங்கே பண்ணிக்கொண்டு போகாமல் இருந்திருக்கலாம் அல்லவா?'' என்று கேட்டார் நம் வைத்தியர். "அப்படிக் கேளுங்கள் வைத்தியரே, உமக்கும் கொஞ்சம் மூளை இருக்கிறது'' என்று ஆரவாரித்தார் முதலியார். பிறகு சொன்னார். "அதையெல்லாம் நான் யோசனை செய்யாமல் உம்மைக் கூப்பிடவில்லை. அவன் அப்படியெல்லாம்மேலும் மேலும் பாசாங்கு செய்து கொண்டே போனால் என்ன ஆகுமென்று அவனுக்கே தெரியும். முதல் மருந்து பலிக்கவில்லையென்று தெரிந்தால் நீர் மேலும்மேலும் கடுமையான மருந்துகளைக் கொடுத்துக் கொண்டே போவீர். அதை அவன் சரியாகச் சாப்பிடுகிறானா என்று பார்க்க நான் வேறு பக்கத்தில் நின்று கொண்டு விடுவேன். அப்போது அவற்றைச் சாப்பிடாமலும் ஏமாற்ற முடியாது; சாப்பிட்டாலோ இல்லாத வயிற்று வலி புதிதாக உண்டாகி அதிகமாகிக் கொண்டே போய்ப் பின் எங்கே வந்து நிற்கும் என்று சொல்ல முடியாது. இத்தனை அவஸ்தைகளுக்கும் பிராணபத்துக்கும் உள்ளாவதை விடப் பரீட்சை எழுதியே 'ப்ளக்' ஆனாலும் பரவாயில்லை என்று கண்டு கொண்டான் பையன். எனவே புத்திசாலித்தனமாக அந்தக் காரியத்தைச் செய்...



முதலியார் முடிப்பதற்குள் தடால்என்ற சப்தம் கேட்டது. நாற்காலியிலிருந்து மயக்கம் போட்டுக் கீழே விழுந்திருந்தார் வைத்தியர்!



க்ஷய வியாதிக் கோளாறுகளால் மூச்சுவிட முடியாதவர்கள் ''இரும்பு சுவாசப்பை''களில் கிடத்தப்பட்டால் தாராளமாக மூச்சுவிடமுடியும். ஆனால் அம்மாதிரி இரும்புக்கூண்டுகள் மிகப் பெரியதாயிருப்பதாலும் சொல்பமாகவே இருப்பதாலும் அதிக விலையுள்ளவைகளானபடியாலும் சாதாரண மக்களுக்குக் கிடைப்பதில்லை. நீங்கள் இப்படத்தில் பார்க்கும் இரு அமெரிக்க டாக்டர்கள் கையில் தூக்கும்படியாகவும் சொல்ப விலையில் செய்யக்கூடியனவாயுமுள்ள ஒரு ''இரும்பு சுவாசப்பை''யை கண்டுபிடிக்க முயன்று வருகிறார்கள். அவர்கள் தயாரித்த மேற்படி கூண்டில் அந்தப் பூனை நிம்மதியாக மூச்சுவிட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அவர்களுடைய இந்தப் பரீட்சை வெற்றிகரமாக நிறைவேறினால் மனிதவர்க்கத்துக்குப் பெருத்த லாபம் ஏற்படும். இவர்களில் இடது பக்கமிருப்பவர் டாக்டர் ஹரோல்ட் லாம்போர்ட், வலது புறம் இருப்பவர் டாக்டர் ரால்ப் ஐகார்ன்.

# 22

## சிவ வேட்டை

★

'இந்த மலையைக்கண்டு நெருங்கிப் போகப்போக, என்ன நாணா! என்மேலுள்ள ஏதோ ஒரு பெரிய சுமை குறைகிறதுபோல் தோன்றுகிறதே; ஏதோ ஒரு புது விருப்பம் பொங்கி எழுவதுபோலவும் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. இந்த விருப்பம் விரைந்து என்னுள்ளே பாய்கிறது. நீ சொன்ன குடுமித்தேவர் இருக்கும் இடம் எங்கே? விரைந்துபோவோம் என்று சொல்லிக்கொண்டே திண்ணனார் காலைவீசி நடந்தார்.

மூவரும் பொன்முகலியாற்றை அடைந்தார்கள். ஆற்றங்கரையிலுள்ள ஒரு மரநிழலிலே கொண்டுவந்த பன்றியை வைத்தார்கள். பிறகு திண்ணனார் காடனை நோக்கி, 'கடைகோலால் தீயைக் கடைந்துவை. நாங்கள் இம்மலையிலே ஏறிப்பார்த்துவிட்டு வந்து சேருகிறோம்' என்று சொன்னார். சொல்லிவிட்டு நாணனோடும் திண்ணனார் பொன்முகலியைக்கடந்து மலைச்சாரலை அடைந்தார்.

கரையிலுள்ள சோலைகளில் வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. உதிர்ந்த பூக்களை அடித்துக் கொண்டுவந்த ஆற்றுநீர் குளிர்ந்து தெளிந்திருந்தது. திண்ணனாருக்கும் சிந்தை குளிர்ந்து தெளிவுற்றிருந்தது. உள்ளுக்குள்ளே ஏதோ ஒருவகை கள்ளைக் குடித்துவிட்டதுபோல் மகிழ்ச்சி-வெறி பொங்கியது:

அளிமிடை கரைசூழ் சோலை
  அலர்கள் கொண்(டு) அணைந்த
    ஆற்றின்
தெளிபுனல் இழிந்து, சிந்தை
  தெளிவுறும் திண்ண னார்தாம்
களிவரு மகிழ்ச்சி பொங்கக்
  காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூ(டு) ஏகிக்
  குலவரைச் சாரல் சேர்ந்தார்

[அளி வண்டுகள். மிடை-மொய்க்கிற. அலர்-மலர். புனல்-நீர். இழிந்து-இறங்கி. களிவரு-கள்ளுண்டு வருவதுபோன்ற. ஏகி-போய். குலவரை-(இங்கே) திருக்காளத்தி மலை.]

மலையிலே நாணன் முன்னே ஏறத் தாமும் ஏறுகிறார் திண்ணனார் பேராசையோடு.

மன்பெருங் காதல் கூர,
  வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி உள்ளத்(து)
  எழுபெரு வேட்கை யோடும்,

[மன்பெருங் காதல்-பொருந்திய பெரிய காதல். கூர-உள்ளது சிறக்க. வள்ளலார்- (இங்கே) திண்ணனார். என்பு நெக்குருகி-எலும்பு நெகிழ்ந்து உருகி. வேட்கை-காதலுக்கு உரிய பொருளை இன்றியமையாததாக்கும் ஆசை.]

திண்ணனார் நாணனைத் தொடர்ந்தவண்ணம் மலையேறிச் சென்றார். திண்ணனாருக்கு அன்பு பெருகி, அளவிலா ஆர்வம் பொங்கிக் காதல் கூர்ந்து எழுகிறது. உள்ளத்தோடு உடம்பும் உருகப் பெரு வேட்கையுடன் செல்கிறாராம். நாணன் முன்னே போகிறான். அவனுக்குப் பின்னே திண்ணனாரின் அன்பும் அதற்குப் பின்னே திண்ணனாரின் உடம்பும் மலைப்படிகளென்னும் தத்துவப் படிகளை ஏறிச் செல்கின்றனவாம். திண்ணனார் சிவபெருமானைக் கண்ட மாத்திரத்திலே அவருடைய அருட் பார்வையை பெற்று அன்புருவம் ஆகிறாராம். நெடுங்காலம் பிரிந்திருந்த குழந்தையைக் கண்ட அன்னைபோல் விரைந்தோடிச் சிவபெருமானைத் தழுவி மோந்து முத்தமிடுகிறார்

மாகமார் திருக்கா ளத்தி
  மலை எழு கொழுந்தாய் உள்ள
ஏகநா யகரைக் கண்டார்,
  எழுந்தபே ருவகை அன்பின்
வேகமா நதிமேற் செல்ல
  மிக்கதோர் விரைவி னோடு
மோகமாய் ஓடிச் சென்றார்.
  தழுவினார் மோந்து நின்றார்.

[மாகம் ஆர்-ஆகாயத்தை அளாவிய. மலை எழுகொழுந்து-மலையின் குடுமி அல்லது உசசியில் உள்ளவர்]

அப்படியே பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றார். மெய்ம் மயிர் சிலிர்த்துப் புளகம் போர்த்தது, கண்களினின்றும் அருவி பாய்வது போல் கண்ணீர் சொரிந்தார்.

'அமயேனுக்கு அகப்பட்டார் இவர்!' என்று ஆனந்தம் கொண்டார்.

வடிவெலாம் புளகம் பொங்க,
  மலர்க் கண்ணீர் அருவி பாய,
'அடியனேற்(கு) இவர்தாம்
    [இங்கே
  அகப்பட்டார் அச்சோ!' என்று,

[அச்சோ-அதிசயக் குறிப்பு.]

நின்ற வேடர் பெருமான், ஆனந்தத்தோடு கவலையும் கவலையும் கொண்டார்.

இப்போது திண்ணனாருக்குத் தன்னைப்பற்றிய கவலையொன்றும் கிடையாது, காளத்தி அண்ணலாரைப்பற்றிய கவலைதான். 'ஐயையோ! கொடிய விலங்குகள் திரியும் காடல்லவா? யானை, கரடி, புலி, சிங்கம் முதலியன சஞ்சரிக்கும் இக்கானகத்திலே நீர் தனித்திருக்கிறீரே வேடர்போல்! உமக்குத் துணை வேண்டாமா? என்று நைந்து நைந்து உருகுகிறார்:

வெம்மறக் குலத்து வந்த
  வேட்டுவச் சாதியார்போல்,
கைம்மலை கரடி வேங்கை
  அரிதிரி கானந் தன்னில்,
உம்முடன் துணையாய் உள்ளார்
  ஒருவரும் இன்றிக் கெட்டேன்!
இம்மலைத் தனியே நீர்இங்(கு)
  இருப்பதே' என்று நைந்தார்.

[வெம்மறக்குலம்—கொடிய மறக்குலம். கைம் மலை-யானை. அரி-சிங்கம். திரு-திரிகிற. நைந்தார்-உள்ளம் நைந்து வருந்தினார்.]

இப்படி நைந்து உருகும்போதே கையிலிருந்த வில் கீழே விழுந்ததையும் அறியாதவராய்ப் பரவசமானார். பின் ஒருவாறு தெளிந்து காளத்திநாதரைக் கவனித்துப் பார்த்தார். இறைவன் திருமுடி ஈரமாயிருப்பதையும், அவர் மீது பச்சிலையும் பூவும் கிடப்பதையும் கண்டு நாணனை நோக்கி, 'அடே! இப்படித் தலையிலே தண்ணீர் கொட்டிப் பச்சிலையும் பூவும் போட்டவர் யாரடா?' என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார். நாணன் அருகேயிருப்பதையும் மறந்துவிட்டார்.

உடனே நாணன் திண்ணனாரை நோக்கி,

'வன்திறல் உந்தை யோடு
மாவேட்டை ஆடிப் பண்(டு)
இக்குன்றிடை வந்தோம் ஆகக்,
குளிர்ந்தநீர் இவரை ஆட்டி,
ஒன்றிய இலைப்பூச் சூட்டி,
ஊட்டிமுன் பறைந்(து) ஓர்
பார்ப்பான்
அன்றிது செய்தான்; இன்றும்
அவன் செய்த தாகும் என்றான்

[வன்திறல்—மிக்க திறமையோடு கூடிய, உந்தை—உம்முடைய தந்தை, மா—விலங்கு. பண்டு-முன்னே. ஒன்றிய-கலந்த. ஊட்டி-உணவு கொடுத்து. முன் பறைந்து—இவருக்குமுன் ஏதேதோ சொல்லி]

இறைவனுக்குப் பூஜை செய்ய வந்த பட்டர் லிங்கத்தை நீராட்டியதையும், இலையும் பூவும் சூட்டியதையும், நிவேதனம் செய்ததையும், மந்திரங்கள் சொல்லி ஆராதனை செய்ததையும் நாணன் பார்த்திருக்கிறான். மந்திரம புரிந்ததில்லை: ஆகவே, 'பார்ப்பான் ஏதேதோ பறைந்தான்!' என்றான் நாணன்.

நாணன் சொன்னதைக் கேட்ட அன்பர், தாமும் அப்படிக் குடுமித் தேவருக்கு (குன்றின் உச்சியிலுள்ள சுவாமிக்கு) இனியவை செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார். பின்பு,

'இவர்தமைக் கண்டே னுக்குத்
தனியராய் இருந்தார், என்னே!
இவர்தமக்(கு) அமுது செய்ய
இறைச்சியும் இடுவார் இல்லை;
இவர்தமைப் பிரிய ஒண்ணா(து);
என்செய்கேன்?
இனியான் சால
இவர்தமக்(கு) இறைச்சி
கொண்(டு) இங்(கு)
எய்தவும் வேண்டும்!' என்று—

[ஒண்ணாது—முடியாது. சால—போதுமான. எய்த-அடைய] எண்ணினார்.

பட்டர் உணவு ஊட்டியதாக நாணன் சொன்னதும், 'உணவு' என்பதற்குத் திண்ணனார் இறைச்சி என்றே பொருள் கொண்டார். 'ஐயோ! இவருக்கு இறைச்சி கொடுப்பார் இல்லையே! இறைச்சி கொண்டு வரவோ மென்றால் பிரியவும் மனம் வரவில்லையே! என்ன செய்வேன்? எப்படியும் இறைச்சி கொண்டு வந்துதான் ஆகவேண்டும்' என்று எண்ணியவராய்ச் சிறிது தூரம் போனார்.

போனவர் திரும்பி வந்தார். வந்தவர் சுவாமியைக் கட்டியணைத்துக்கொண்டார். மறுபடியும் புறப்பட்டார் இறைச்சி கொண்டுவரவேண்டுமென்று. சிறிதுதூரம் போனதும் ஆசையோடு திரும்பிப் பார்த்து, 'நாதனே! நல்ல இறைச்சியை நானே கொண்டுவருவேன்' என்பார். கன்றை விட்டுப் பிரியும் தலை ஈற்றுப் பசுப்போல் ஆகிவிட்டாராம் வேடர் தலைவர்,

போதுவர், மீண்டு செல்வர்,
புல்லுவர் மீளப் போவர்,
காதலின் நோக்கி நிற்பர்,
கன்றகல் புனிற்றாப் போல்வர்,
"நாதனே! அமுது செய்ய
நல்லமெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு
கொண்(டு) இங்கு வருவேன்'
என்பார்

[போதுவர்-போவார். மீண்டு செல்வர்—திரும்பி வருவார். புல்லுவர்—தழுவுவார்: கன்று அகல்-கன்றைப் பிரியும். புனிற்றா-இளங் கன்றுப் பசு; தலை ஈற்றுப்பசு; கோதற-குற்றம் இல்லாதபடி]

இன்னும் பிரிந்து செல்ல மனம் எழவில்லை திண்ணனாருக்கு. அங்கே இருக்கவும் மனம் இடங் கொடுக்கவில்லை இந்த நிலையில் கண்ணீர் வந்துவிடுகிறது. கடைசியாகத் துணிந்து வில்லை எடுத்துக் கொண்டு புறப்படுகிறார், 'சாமி இருக்கிறார் சாமியைக்காப்பாற்ற!' என்று கருதியவர்போல்:—

'ஆர்தம ராக நீர் இங்(கு)
இருப்ப(து?) என்(று) அகல
மாட்டேன்,
நீர்பசித் திருக்க இங்கு
நிற்கவும் கில்லேன்! என்று
சோர்தரு கண்ணீர் வாரப்
போய்வரத் துணிந்தா ராகி,
வார்சிலை எடுத்துக் கொண்டு
மலர்க்கையால் தொழுது
போந்தார்

[தமர்—சுற்றமாய். நிற்கவும் கில்லேன்—நிற்கவும் முடியாமல் இருக்கிறேன். சோர்தரு—சொரிகிற. வார—நீண்டுபெருக. வார் சிலை—நீண்டவில்.]

திண்ணனார் வில்லுங்கையுமாக மலையை விட்டு இறங்கிச் சோலை சேர்ந்தார். நாணன் பின்னே தொடர்ந்து வந்தான். அதுகண்ட காடன் எதிரே போய்க் கும்பிட்டு நெருப்புக் கடைந்து வைத்திருக்கிறேன். எவ்வளவு தாமதமாக்கி விட்டீர்கள்! வேட்டைக் காட்டுக்குத் திரும்பிப் போக வேண்டாமா?' என்று கேட்டான்.

ஆனால் இந்தச் சிவவேட்டையில் ஈடுபட்டவர் திரும்பியும் போவாரோ?

# மாதர் மகா சபை

குங்குமம்

'அப்புறம்! நாளைக்குக் கொஞ்சம் வைத்துக்கொள்ள மாட்டீர்கள்போலிருக்கிறது! என்னடியம்மா அப்படிப்பட்ட சிரிப்பு? என்றாள் ருக்குவின் மாமியார்.

விமலா கொஞ்சம் சமாளித்துக்கொண்டாள். சரோஜாவால் சமாளிக்கவே முடியவில்லை. அவள் சிரிப்பை எவ்வளவுக்கு எவ்வளவு அடக்க முயன்றாளோ அவ்வளவுக்கு அவ்வளவு அது அதிகரிக்க ஆரம்பித்து விட்டது.

'ஏது, பைத்தியம் கியித்தியம் பிடித்து விட்டதா என்ன? ஒன்றும் ஓய்கிற வழியாகக் காணோமே! என்னடியம்மா அப்படி காணாத அதிசயத்தைக் கண்டுவிட்டீர்கள்? என்றாள் ருக்குவின் மாமியார்.

மெதுவாக சரோஜா கொஞ்சம் சமாளித்துக்கொண்டு, 'பைத்தியமா! நேற்று அந்தப் பசங்கள் பட்ட பரிபவம்! அதுகள் மூஞ்சியை இப்பொழுது நினைத்துக் கொண்டால்-கூட...என்று சொல்லிக்கொண்டிருக்கையில் மறுபடியும் குபீரென்று சிரிக்க ஆரம்பித்து விட்டாள் 'சரிதான் போ! அது ஒன்றும் இப்பொழுது ஓய்கிற வழியாகக் காணோம். சிரிடியம்மா, சிரி. உன்னால் முடிந்தவரையில் சிரித்துவிட்டு வா, என்று சொல்லி விட்டு, அங்கிருந்த மற்றவர்களைப் பார்த்து, அது ஒன்றும் இப்பொழுது ஓயாதுபோலிருக்கிறது. 'அவுட் சிரிப்பு' 'விடா நகைப்பு' என்று பலபெயர்களில் சொல்லுகிறார்களே அதில் ஏதாவது ஒரு ரகத்தைச் சேர்ந்ததோ என்னவோ அந்த சிரிப்பு, அவளால் முடிந்த வரையில் சிரித்துவிட்டு வரட்டும். அதற்குள் நாம் ஒரு ஆட்டம் 'தாயக்கட்டை' ஆடலாம், ரொம்ப நாளாயிற்று' என்றாள் ருக்குவின் மாமியார்.

'நிஜமாகவே இதென்னடி பைத்தியம் கியித்தியம் பிடித்து விட்டதா என்னடி' என்றாள் பானு.

கடைசியில் ரொம்ப சிரமப்பட்டு சரோஜா தனக்குவந்த சிரிப்பையெல்லாம் அடக்கிக் கொண்டு' ஆனாலும் இந்தக் கடவுளுக்கு இவ்வளவு 'போக்கிரித்தனம்' கூடாது என்றாள்.

'சரிதான்' பூர்வ பீடிகை வேறையா?' 'இல்லை மாமி! நிஜமாகவே சொல்கிறேன். நீங்களானால் அங்கேயே விழுந்து விழுந்து சிரித்திருப்பீர்கள். நேற்று..., பவித்ரோத்ஸவம் பூர்ணாஹுதிக்காக நானும், விமலாவும்...கோயிலுக்குப் புறப்பட்டோம். இரண்டுபேரும் பஸ்ஸில் ஏறினோம். நாங்கள் ஏறின பஸ்ஸிலேயே ஒரு பெண் ஏறினாள். அழகாவது அழகு. இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். கன்னங்கரேலென்று நிகுநிகுவென்று தலை நிறைய மயிர். மழமழவென்று சந்திரபிம்பம் மாதிரி முகம். காதிலும் மூக்கிலும் பளிச் பளிச்சென்று டால்வீசும் வைரங்கள். முகத்தின் அழகுக்கே சிகரம் வைத்த மாதிரி மூக்குக்கண்ணாடி. நீலக்கலரில் பட்டுப்புடவை. அதற்கெடுப்பாக வெள்ளைக் கலரில் ஜாக்கெட். உடம்புக்கேற்ற நகை. எதிர் ஸீட்டில் இரண்டு ஆண் 'பிள்ளைகள்' உட்கார்ந்திருந்ததுகள். இவளைப் பார்த்ததுதான் தாமதம். பிறகு அவள் மீது வைத்த கண்களை அதுகள் எடுக்கவே இல்லை. அதிலும் அந்த ஒரு பக்கத்துப் புடவையைக் காற்றில் பறக்கவிடுகிற மாதிரி விட்டு விட்டு, அவள் போர்த்திக் கொண்டுவந்த மாதிரியானது அந்தப் பசங்களைப் பாவம், என்னதான் செய்துவிட்டதோ, அப்படிக் 'கொட்டாவி' விட்டுத் தவியாய்த்தவித்ததுகள். அதுகள் கையில் மாம்பலத்துக்கு டிக்கெட் வைத்துக்கொண்டிருந்ததுகள். இவள் எங்களுடன் லஸ்ஸில் இறங்கினாள். அதுகளும் கூடவே இறங்கிவிட்டதுகள் என்று சரோஜா சொல்லிக்கொண்டிருக்கையில், அவளும் கோவிலுக்குத்தான் வந்தாளோ? என்றாள் பானு.

'ஆமாம். கோவிலுக்குத்தான் வந்தாள். பாதிவழி போய்க் கொண்டிருந்தோம். தடீரென்று படபடவென்று பிரமாதமான மழை வந்துவிட்டது. 'கொட்டு கொட்டு' என்று கொட்டி நாங்கள் ஒரு வீட்டு வாசலில் போய் தங்குவதற்குள் புடவையெல்லாம் 'தெப்பமாய்' நனைந்துவிட்டது. கூடவந்த அந்தப்பசங்களும் நாங்கள் ஓடித் தங்கிய வீட்டுவாசலுக்கே வந்து சேர்ந்ததுகள். பாவம் யாரோ மழையில் நனைந்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்று வீட்டுக்கார மாமி எங்

கள்மீது அனுதாபம் கொண்டு தெருவிளக்கைப் போட்டாள். அடியம்மா! என்னதான் ஆச்சரியம்! அங்கே எங்களுடன் நின்றுகொண்டிருந்தவள், எங்களுடன் வந்தவள் தானா என்று எங்களுக்கே சந்தேகம் வந்துவிட்டது என்றாள் சரோஜா.

‘ஏன்? வேஷம் வெளிப்பட்டுவிட்டதோ’ என்றாள் ருக்கு.

‘வேஷமாவது வேஷம்! அந்த மாதிரி வேஷம் போட்டுக்கொள்வதென்பது சாதாரணமாக எல்லோருக்குமே முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. அவ்வளவு மழ மழவென்று தெரிந்த முகம், பவுடரெல்லாம் கரைந்துபோய் குழி குழியாய் ஒரே அம்மைப்புள்ளிகளாக இருந்தன. என்ன தான் தடவி இருந்தாளோ, தலையில் தடவியிருந்த கறுப்புச் சாயமெல்லாம் கரைந்து வெள்ளை ஜாக்கெட் கறுப்பு ஜாக்கெட்டாய்ப் போய்விட்டது. வெள்ளை மயிரும் கறுப்பு மயிரும் கலந்த தலையின் நிஜ ஸ்வரூபம் வெளிப்பட்டது. ஈ[illegible]மாயிருக்கிறதே என்று தலை மயிரை உதறினாள். பெரிய ‘சவுரி’ கையோடுவந்து விட்டது. ஒரு சாண் நீளம்கூட இல்லை. குதிரை வால்மாதிரி தலையில் மயிர். அதெல்லாம் கூட வேடிக்கையில்லை. முகத்தில் வழிந்த ஜலத்தைத் துடைக்க அந்த மூக்குக் கண்ணாடியைக் கழட்டினாள். ஒரு கண் பொட்டை என்பதும் அதனுடைய கோரமும் அப்போதல்லவோ தெரிந்தது. சாதாரணமாக இருபத்தைந்து வயதுக்குள்ளாக மதிக்கப்பட்ட பேர்வழி திடீரென்று முப்பத்தைந்து வயதுக்குமேல் மதிக்கும்படியாக ஆகிவிட்டாள். அப்பொழுது அந்தப் பசங்கள் பார்த்துக்கொண்ட ஒரு பார்வையும், அதுகள் சிரித்துக்கொண்டே மறு வினாடியே அவ்விடத்தைவிட்டு ஓடின ஓட்டமும், அந்தப்பெண் இல்லை, இல்லை, அம்மாமி முகத்தில் வழிந்த ஒரு அசட்டுத் தனமும் மறக்கக்கூடிய விஷயங்களா! இதற்கு எவ்வளவு சிரித்தால் தான் போதும்! வாஸ்தவத்திலேயே கொஞ்ச நாழியில் கடவுள் என்ன தான் வேடிக்கை செய்துகாட்டிவிட்டார்! என்ன தான் இருந்தாலும் இவ்வளவு ‘மேக் அப்பா?’ என்றாள் சரோஜா.

‘எல்லாம் பிரமாதம்தான் உனக்கு! இன்றைய உலகமே இதுதானே! எங்கள் மூன்றாவது அகத்தில் இருக்கிறாளே ஒரு சினிமா ஸ்டார். அவளை நீ நேரிலும் பார்த்திருக்கிறாய். சினிமாவிலும் பார்த்திருக்கிறாய். தொட்டால் ஒட்டிக்கொள்கிற கறுப்பு. வயது கிட்ட தட்ட நாற்பது ஆகப் போகிறது. சினிமாவில் அவளைப் பார்த்தால் இருபது வயதுக்காரி மாதிரிதான் இருக்கிறாள். நேரில் பார்க்காமல் சினிமாவில் பார்த்தவர்கள் யாராவது அவளைக் கருப்பு என்று சொல்வார்களா? ஆ ஆ! என்று அவளைப் பார்த்துவிட்டு எல்லாம் அப்படியே கொட்டாவி விடுகிறார்கள். அவ்வளவு அழகாக ‘மேக் அப்’ செய்திருக்கிறார்கள். இன்றைய உலகமே வெறும் ‘மேக் அப்’பில்தானே இருக்கிறது? அவ்வளவென்ன! உதயமானால் அஸ்தமிக்கிற வரையில் தெருவில் பட்டுப்பூச்சிகள் மாதிரி விதம் விதமான உடைகளில் பெண்கள் ஒய்யாரமாய்ப் போய்கொண்டிருக்கிறதுகளே, அதில் நூற்றுக்கு இருபதுதான் திடகாத்திர சரீரிகளாய் இருக்குங்கள். மீதியெல்லாம் ஏதாவது ஒன்று மாற்றி யொன்று நோயினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்குங்கள். ஆனால் அதுகள் ‘டிரெஸ்’ செய்துகொண்டு போகும் மாதிரியைப் பார்த்தால் டாக்டர்கள் தவிர வெளியிலிருப்பவர்களுக்கு நோயாளிகளாகவே தெரியாது’ என்றாள் பானு.

‘எங்கள் மாமா இருபது வருஷங்களுக்குமுன் ஹாஸ்யமாய்ச் சொன்ன ஒருகதை இன்று பிரத்யட்சமாய் நடைபெறுகிறது. அப்பொழுதெல்லாம் அதை ஒரு பரிகாசமாகச் சொல்லிச் சிரிப்பார். இப்பொழுது அதுதான் நாகரிகமாய் இருக்கிறது,’ என்றாள் ருக்குவின் மாமியார்.

‘என்ன கதை அது மாமி?’ என்றாள் பானு.

‘எங்கள் மாமாவின் ஊரில் எச்சுமு என்று ஒருத்தி இருந்

தாளாம். அவள் பால்யத்திலேயே விதவையாகி விட்டாளாம். இந்த சமூகக் கட்டுப்பாடுகளுக்கெல்லாம் அடங்கி இருக்காமல் கண் மறைவாக எங்காவதுபோய் நாகரிக வாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஆசை உண்டாகிவிட்டதாம். உடனே யாருடனும் சொல்லாமல் கொள்ளாமல் ஒருநாள் ராத்திரி திடீரென்று பட்டணத்துக்குக் கிளம்பிவிட்டாளாம். ஒரு நாள் பட்டணத்தில் மாமா டிராமில் போய்க்கொண்டிருந்தாராம். எதிர்க் கோடியில் ஒரு பெண் டிராமில் ஏறிக்கொண்டிருக்கையில் திடீரென்று டிராம் புறப்பட்டுவிட்டதாம். அவள் அப்படியே கீழே விழுந்துவிடப்போனுளாம். பக்கத்திலிருந்தவர்கள் அவளை விழவொட்டாமல் பிடித்துக்கொள்வதற்காக ஒருவர் அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டாராம். மற்ெருருவர் அவளுடைய தலை முடிச்சைப் பிடித்துக்கொண்டாராம். முடிச்சு அப்படியே கையோடு வந்துவிட்டதாம்' என்றுள் ருக்குவின் மாமியார்.

'டோபா மயிர்!' என்றுள் சரோஜா.

யாருமில்லை. நம்ம ஊர் எச்சுமுதான். பக்கத்திலிருந்த பேர்வழியின் கையில் சிகையைக் கொடுத்துவிட்டு நின்றுகொண்டிருக்கிறுள். எல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். நாகரிகம் எப்படி முன்னேறுகிறது பார்த்தாயோ லியோ? என்று சொல்லுவார். அதேமாதிரியல்லவோ இருக்கிறது கதை? என்றுள் ருக்குவின் மாமியார்.

இன்றைக்கும் அதேகதைதான். வேண்டுமாஞல் தெருவில் அலங்காரம் செய்துகொண்டு போகும் பெண்களின் பின்னலை இழுத்து வேண்டுமாஞல் பாருங்களேன், நூற்றுக்குத் தொண்ணூறு பின்னல்கள் கையோடு வந்துவிடும்.

சவுரி 'மேக் அப்' என்றுள் சரோஜா.

எல்லோரும் கொல் என்று சிரித்துவிட்டார்கள்.

ஆஞல் வாழ்க்கையின் ஆனந்தமே இதில்தான் இருக்கிறது. ஒரு கல்யாணம், கார்த்திகை, திருவிழா என்றுல் ஒரு குதூகலம் காணப்படுவதற்குக் காரணம் இந்த டிரெஸ்ஸும் 'மேக்அப்'பும் தான். கண்ணுக்கு ஒரு குளிர்ச்சி, மனதுக்கு ஒரு மகிழ்ச்சி. ஆஞல் இப்பொழுதெல்லாம் அன்றுடும் திருவிழா இருக்கிறது, அவ்வளவு தான் வித்யாஸம் என்றுள் ருக்கு.

இருக்கட்டும், இருக்கட்டும். சந்தோஷமாக இருக்கட்டும். குருடன் கண் தான் வேண்டுமென்பான். கோலா வேண்டுமென்பான்? அந்தமாதிரி இதஞல் ஜனங்களுக்குப் பொதுவில் ஒரு உற்சாகமும், மகிழ்ச்சியும் ஏற்படுவதென்றுல் தாராளமாய் அதெல்லாம் வேண்டியதுதான். அமிர்தம் விஷமாகாமல்மட்டும் பார்த்துக்கொள்ள வேண்டும், அவ்வளவுதான் என்றுள் ருக்குவின் மாமியார்.



# உங்கள் கால பலன்

ராவ்

## மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

மேஷ ராசிக்காரர்களுக்குப் போன மாதத்தைவிட இது அனுகூலமானது. பண விஷயத்தில் முன்னிருந்ததைவிட வசதிகரமான நிலைமை ஏற்படும். குழந்தைகள், மனைவி, அல்லது புருஷன் தேகாரோக்கியக் குறைவால் குடும்பத்தில் ஒருகால் சந்தோஷமில்லாமல் போகலாம். பொதுவாக சொந்த ஆரோக்கியமும் அதிருப்திகரமாகலாம். தூரப் பிரதேசத்துக்குப் பயணம் போகும் சந்தர்ப்பமும் இம்மாதத்தில் வாய்க்க இடமுண்டு. வேலையில்லாதவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் உத்தியோகம் கிடைக்கும். பெரியவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சந்தோஷமோ, நிம்மதியோ இராது. இம்மாதத்தின் மூன்றாவது வாரம் முக்கியமாக விளங்கும். இந்த கட்டத்தில் தேக நலனை ரொம்ப ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். உத்தியோகத்தில் ஆதரவிருக்கும். வேலை மாற்றமோ அல்லது செய்த சேவைக்குப் பாராட்டோ கிட்டும். மேலதிகாரி இந்த ராசிக்காரர்களிடம் அபிமானம் கொண்டு உத்தியோக உயர்வோ, அல்லது வேலையில் மகிழ்ச்சிகரமான மாறுதலையோ உண்டுபண்ணித் தரலாம். அக்டோபர் 22-ந் தேதியும், நவம்பர் 3-ந் தேதியும் இந்த ராசிக்காரர்களுக்கு அதிருஷ்டகரமானதல்ல. பிறருடன் சண்டை சச்சரவு வைத்துக்கொள்ள வேண்டாம். தேக சுகமும் பாதிக்கப்படும். நவம்பர் 4-ந் தேதி முதல் அனைத்தும் சவுகர்யமாயிருக்கும். வியாபாரிகளுக்கு காலப்போக்கு திருப்திகரமாகவேயிருக்கும். தொலைவிலுள்ள வியாபாரம் அதிக வருவாயைத் தருவதாயிருக்கும். சென்றமாதத்தைவிட அதிகமாக நின்ற பாக்கிகள் வசூலாகும். புருஷன் அல்லது மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படும். இரண்டாம் பகுதியில் இல்லற சுகம் பாதிக்கப்படும். கல்யாணமாகாதவர்களானால் அவர்களுக்கு இந்த சமயத்தில் திருமணம் நடைபெறும். மனைவி வழியிலிருந்து பண வசதி ஏற்படும் வெளியிடப்பழக்கவழக்கங்களுக்கு இது முக்கியமானமாதமே. பெரியோரின் ஆதரவுண்டு. குழந்தைகளின் பிரச்னைபற்றிச் சிந்தையிலாழும்படியிருக்கும். குழந்தைகளில் ஒருவர் கஷ்டப்படும்படி நேரும்.

அக்டோபர் 18, 26, நவம்பர் 5, 8, 11, 14 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டகரம்.

## விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

சனி, உரானஸ், செவ்வாய், ராகு, முதலியகெட்ட கிரஹங்கள் காரணமாக இம்மாதம் விருஷபராசிக்காரர்களுக்கு உத்தியோகம்பற்றிய கவலைகளேற்படும். சூழ்நிலையில் எதிர்ப்பிருக்கும். உறவினர்கள் அவதூறு சொல்வார்கள். பணமுடையும்கூடச் சேரும். முக்கியமாக இம்மாத இரண்டாம்பகுதியில் செய்யவேண்டிய வேலையில் மாறுதலேற்படலாம். ஜாகையிலும் மாறுதல் உண்டாகலாம். பணக்கவலைகளும், குழந்தைகள், உறவினர் இவர்களால் கவலையும் ஏற்படும். தாயாருள்ளவர்கள், தங்கள் தாயின் தேகநிலை குறித்துக்கவலைப்படும்படியிருக்கும். கல்யாணம் செய்துகொள்ள விரும்புபவர்களுக்கு அப்பிரச்னை சுலபமாகமுடியும்.

சென்ற மாதத்தைவிட இந்த மாதம் அதிகமாகச் சிநேகிதர்கள் ஏற்படுவார்கள். பெரியவர்களுடைய அதிருப்திக்குப் பாத்திரமாக நேரும். இரண்டாம் பகுதியில் ஒரு தூர தேசப் பயணம் போகும்படியான நிர்ப்பந்தமேற்படும். நவம்பர் 3, 5 தேதிகள் குடும்பத்தில் முக்கிய சம்பவங்கள் நிகழக்கூடிய நாட்கள். வியாபாரிகளானால் அவர்களது வர்த்தகத்தில் மேற்படி இரண்டு நாட்களும் முக்கியமாகவிருக்கும். வியாபாரம் லாபகரமாக நடக்கும். கூட்டு வியாபாரம் ரொம்ப லாபம் தரத்தக்கதாயிருக்கும். வரவேற்கத்தகுந்த மாறுதல் இந்தத் துறையில் ஏற்படும். புதிய ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களை அக்டோபர் 22-ந்தேதிக்குமேல் செய்வது லாபகரமாயிருக்கும். இந்தக் கட்டத்திலிருந்து வியாபாரக் கஷ்டங்கள் சுலபமடையும். ஊழியர்கள் விரும்பத்தகுந்த மாறுதல்களையடைவர். முதலாளிகளுக்கு இம்மாதத்தில் திறமையுள்ள சிப்பந்திகள் கிடைப்பர். ஹேஷ்ய இனங்கள், பந்தயங்கள் இவற்றில் அதிகமாக எதுவும் வராது. பார்க்கப்போனால் இவற்றில் பிரவேசிப்பது ஏமாற்றம்தான்! நியாயமான வியாபாரவரையறையை யொட்டி நடப்பதுதான் நலம். வெளியிடங்களில் வாழ்க்கை சுவையோடு இருக்கும். எந்த விஷயத்திலும் மனைவியானால் புருஷனுக்கோ,

புருஷனுல் மனைவிக்கோ பரஸ்பரம் வழிகாட்டியாகயிருந்து நிலைமைகளை சாத்விகமாகச் சமாளிக்கலாம்.

அக்டோபர் 22, 30, 31, நவம்பர் 5, 10, 12 13 தேதிகள் இவர்களுக்கு வசதியான தினங்கள்.

## மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

இம்மாதம் இந்த ராசிக்காரர்கள் அதிருப்திப்பட இடமேயில்லை. குடும்பத்தில் நிம்மதியாக வாழலாம். அர்த்தமில்லாது இதற்குமுன் இருந்துவந்த கவலைகளெல்லாம் மறைந்துவிடும். பணவிஷயத்தில் விசேஷ அபிவிருத்தியுண்டு. உத்தியோகத்தில் முன்னையும் விட அதிகத் திருப்தி நிலவும். திறமை, புகழுக்குப் பாத்திரமாகும். எழுத்தாளர்களானுல் அவர்கள் இம்மாதம் புதிய விஷயங்களை எழுத மிக்க வசதியாயிருக்கிறது. அவர்களுக்கு சொந்தமாக, புதிய விஷயங்கள் சிருஷ்டிக்கும் திறமை இம்மாதம் உண்டாகும். இன்னும் சிலருக்கு மனம் ரொம்ப பாரமாயிருக்கும். சனி 6-வது இடத்தி லிருப்பதாலும், 6-வது வீட்டுக்குடைய கிரகம் நீசனுயிருப்பதாலும் பொதுவாக சகோதரர் விஷயமாகக் கவலைப்படும்படியிருக்கும். சகோதரர் ஒருவருக்குத் தேக அசௌகரியமேற்படும். முக்கியமாக இரண்டாம் பகுதியில் குழந்தைகளுடைய விவகாரங்களைப்பற்றி கவனம் செலுத்தும்படியிருக்கும். குரு தன் சொந்த வீட்டிலேயே அதாவது களத்திரஸ்தானமான 7-வது இடத்தில் இருப்பதால் கல்யாணம் செய்துகொள்ளவிருப்பவர்களுக்கு அது சுலபமாக நடைபெறும். பிரிந்து வாழும் மனைவி அல்லது புருஷனுயிருந்தால் அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் கட்டமும் வாய்க்கும். மனைவி தன் புருஷனின் சுபிட்சத்துக்கு உதவியாயிருக்கலாம். இம்மாதத்தின் பிரதான அம்சங்கள் பண வசதி, உத்தியோகத்தில் திருப்தி, இல்லற சுகம். நண்பர்கள் அதிகமாவர். நண்பர்களில் ஒருவர் திடீரென்று விரோதமாகலாம். நவம்பர்பர் 3, 4-ந்தேதி வாக்கில் தேக சுகம் பாதிக்கப்படும்; அல்லது எதிர்பாராத சம்பவங்கள் நிகழும். வியாபாரிகளுக்கு இம்மாதம் மிக்க அதிருஷ்டகரமாகவிருக்கும். இரண்டாவது வாரத்தில் வியாபாரம் அதிகரிக்கும். சிலருக்கு கிட்டிய பந்துக்களிடம், அதாவது பிள்ளை, பெண் இவர்களிடம் உள்ள உறவு பாதிக்கப்படும்.

அக்டோபர் 18, 21, 23, 25, 31, நவம்பர் 2, 5, 11, 14, தேதிகள் இவர்களுக்கு உகந்தவை.

## கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

கடகராசிக்காரர்களுக்குச் சென்ற மாதத்தைப் போல இது சுலபமானதாகயிராது. குடும்பத்திலும் சரி, உத்தியோகத்துறையிலும் சரி, தாமதங்களும், ஏமாற்றங்களும் சம்பவிக்கும். குடும்ப வட்டாரத்தில் எண்ணியபடி எதுவும் நடக்காது. அதிகமாகச் செலவுகள் ஏற்படும். குடும்பம், குழந்தைகள், உறவினர்கள் இவர்களைப்பற்றி மனம் தீவிரமாக ஈடுபட்டு நிற்கும். தேகாரோக்கியம் பூர்ண திருப்தியோடிருக்குமென்று சொல்வதற்கில்லை. மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படும். சுப காரியத்தையொட்டி பிரயாணமொன்று நேரலாம். பெரியவர்களுடைய அதிருப்திக்குப் பாத்திரமாக நேருமாதலால் உஷாராக நடந்து கொள்ளவேண்டும். நண்பர்களில் ஒருவர் விரோதமாவார். எதிர்பாராத நண்பரைச் சந்திக்க நேர்ந்து அச்சந்திப்பினுல் அனுகூலம் கிட்ட இடமுண்டு. கல்யாணமாகாதவர்கள் பிரச்னை இந்தக் கட்டத்தில் முன்னணிக்கு வரும். அவர்கள் இப்போது நிச்சயதார்த்தம் செய்துகொள்வதற்கு வசதியாயிருக்கும். ஆனுல் கல்யாணம் உடனே நிகழாது. உத்தியோகத்தில், இலாகாவிலிருந்து எதிர்பார்க்கும் ஆதரவைப்பற்றிக் கவலைப்படும்படியிருக்கும். குழந்தைப்பேறு பெற எண்ணியவர்களுக்கு இம்மாதம் அவ்வெண்ணம் நிறைவேறும். வியாபாரிகள் தங்களுடைய நடவடிக்கைகளைச் சுலபமாக நடத்த முடியும். திடீரென்று ஒப்பந்தங்கள் ஏற்பட்டு லாபம் வருவதற்கும் இடமிருக்கிறது. செவ்வாய் 5-ல் இருப்பதால் கண் மூடித்தனமாக ஹேஷ்யங்களில் ஈடுபடுவதை விலக்கவேண்டும். வைதிகமாகவும், ஆசாரப்பற்றுடனும் நடக்க வேண்டுமென்ற எண்ணத்தை இம்மாதம் உண்டு பண்ணும்.

அக்டோபர், 18, 19, 23, 25, 29, நவம்பர் 2, 4, 8, 11, தேதிகள் இவர்களுக்கு திருப்திகரமான தினங்கள்.

## ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

லக்னத்தில் சனியிருப்பதால் சுணங்கிப்போகும் நிலைமை இருந்துவருமென்ருலும் ஸிம்மராசிக்காரர்களுக்கு இம்மாதம் நன்ருகவே விளங்கும். எடுத்துக்கொண்ட காரியமும், எதிர்பார்க்கும் பணவிஷயங்களிலும் சனியிருப்பதால் தாமதமேற்படும். குடும்ப வாழ்க்கை சுமார். நிலத்தில் பணம் போடும்படியாக

> 1948-ம் அக்டோபர் 17உ முதல் நவம்பர் 16உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்து கொள்வதற்குதவியாக நட்சத்திரங்களும், பாதங்களும் பக்கத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### 1948-ம் வருஷம் அக்டோபர்மீ 17-ந் தேதி காலையிலுள்ள கிரஹ நிலைமை.

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | ராகு | | உரானஸ் |
| | | | |
| | | | சனி சுக்கிரன் |
| குரு | செவ்வாய் | கேது சூரியன் புதன் | |

வோ அல்லது சிலருக்கு வேறிடத்துக்கு ஜாகை போகும்படியாகவோ ஏற்படும். செவ்வாய் இருக்கும் ஸ்தான விசேஷத்தால் பணக்காரர்களாயிருப்பவர்களுக்கு வாஹனப் பிராப்தி ஏற்படும். இரண்டாம் பகுதியில் உத்தியோகம் அல்லது தொழிலைப்பற்றி ஏதாவதொரு கவலை ஏற்படும். இதற்குக் காரணம் 10-வது வீட்டுக்குடைய சுக்கிரன் நீசம் பெற்றிருப்பதேயாகும். சிலருக்கு வேலையில் மாறுதலேற்படும் அல்லது தங்கள் சொந்த ஊருக்கே மாற்றப்படவும் கூடும். இரண்டாம் பகுதியிலேயே சகோதரர் அல்லது சகோதரியின் விவகாரம்பற்றிக் கவலை ஏற்படும்.

இரண்டாவது வாரத்தில் உறவினர்களின் விஷயங்கள் காரணமாகக் குடும்ப சுகம் பாதிக்கப்படும். கண்ணாடி போட்டவர்களானல் இம்மாதத்தில் வேறு கண்ணாடி மாற்றும்படியிருக்கும். இரண்டாவது வாரத்தில் பணவசதிகள் குறைவின்றியிருக்கும். எதிர்பார்க்குமிடத்திலிருந்து பணம் வந்து சேரும். நடவாமல் நின்றுபோன விஷயங்கள் அநேகமாக முடிவடையும். தொலைவிலுள்ள இடத்திலிருக்கும் குழந்தைகளைப்பற்றி நல்ல சேதி வரும். இதர நிலைமைகளெல்லாம் பொதுவாக சாதகமாயிருப்பின், இது வரையில் இல்லாதிருந்தால் இப்போது மனைவி கருத்தரிக்கலாம். உத்தியோகத்தில் நிலைமை அதிருஷ்டகரமாயிருக்கும். முதல் பகுதியில் மேலதிகாரியின் ஆதரவிருக்கும். கிட்டிய பந்துக்களுக்குப் பண உதவிபுரிய நேரலாம். வியாபாரிகளுக்கும் இம்மாதம் அதிருஷ்டகரமே. இவர்கள் செய்யும் ஹேஷ்யங்களெல்லாம் அடுத்த மார்ச் மாதம்வரை வெற்றிகரமாயும், லாபகரமாயும் இருக்கும்.

அக்டோபர் 18, 19, 23, 29, நவம்பர் 2, 4, 5, 10, 13 தேதிகள் இவர்களுக்குத்தரமானவை.

## கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

இந்த மாதத்தில் கன்யா ராசிக்காரர்களுடைய அவகாசமெல்லாம் குடும்ப விவகாரங்கள், கிட்டிய பந்துக்களின் விஷயங்கள் இவற்றிற்கே செலவாகும். இந்த ராசிக்காரர்களுடைய சொத்து அல்லது வீடுபற்றி தீவிரமாக ஈடுபட்டு நிற்க நேரும். முதல் பகுதியில் பண விஷயமாகக் கவலைகளிருக்கும். பண சம்பந்தமான விவகாரங்கள் சீராக முடிவு பெருது. தவருன இனங்களில் பணத்தைப்போடும் மனோபாவமிருக்கும். சிலருக்கு இம்மாதம் கடன்படும்படியாகவிருக்கும். இதற்குக் காரணம் சூர்யனுக்கும், சுக்கிரனுக்குமுள்ள பரிவர்த்தனை யோகமே காரணம். பண சம்பந்தமான சகல காரியங்களையும் ஒத்தி வைத்துக்கொள்வது நலம். பேச்சிலாகட்டும், செயலிலாகட்டும் அவசரமாக உணர்ச்சி வசப்படும்படியிருக்கும். இதைத் தடுத்துக் கொள்வது நல்லது. மனைவி அல்லது புருஷனின் தேகநிலைமை பாதிக்கப்படும். சகோதரர்போன்ற கிட்டிய உறவினர்களுடன் உள்ள தொடர்பு திருப்திகரமாயிராது.

இம் மாதத்தில் மன நிம்மதி கிடையாது. உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடி அனுகூலம் கிட்டாது. முன்னிருந்ததைக் காட்டிலும் கடுமையான வேலைகள் செய்யும்படி நேருமெனக் காண்கிறது. திடீரென்று ஒரு பிரயாணமும் வந்து சேரலாம். வியாபாரிகளுக்கு ஏற்ற மாதமல்ல இது. எதிர்பார்த்ததற்கு அதிகமாகப் பணத்தை வியாபாரத்தில் முடக்கியிருப்பது தெரியவரும். விற்பனை தாமதப்படும். அதிருப்திகரமாயுமிருக்கும். இம்மாத இரண்டாம்பகுதி சற்று அபிவிருத்திகரமாகவிருக்கும். அக்டோபர் 23-ந் தேதியிலிருந்து 29-ந் தேதிக்குள் இந்த ராசிக்காரர்களது விவகாரங்கள் எதிர்பாராத விதமாகத் தடங்கல் பட்டுப் போகும். நவம்பர் 5-ந் தேதிக்குப் பிறகுதான் இந்த நிலைமை திருந்தும். சம்பாத்தியத்திற்கான காலம் அடுத்த மார்ச் மாதத்துக்குள்தான். இதற்குப் பிறகு கொஞ்சநாள்வரை நிலைமை சம்பாத்தியத்திற்கு உகந்ததாயிராது.

அக்டோபர் 18, 19, 23, 29, 30, நவம்பர் 6, 10, 12, 13, தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

## துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

இந்தராசிக்காரர்களின் விவகாரங்களிலெல்லாம் கிரஹங்களின் பிரகாசமான வீட்சண்யம் நிலவும், அதிருஷ்டம் இவர்கள் திக்கில் அடிக்கும். பணம் குடும்பம் ஆகிய துறைகளிலிருந்த தடைகளும் சுணக்கமும் குறையும். பண அனுகூலம் உண்டென்பது தெளிவாகும்; நண்பர்களிடம் கொண்டுள்ள தொடர்பு, உறவினர்களுடன் உள்ள பழக்கம் இவற்றில் அதிருஷ்டகரமான சக்தி நிலைமை நிலவும். சிலருக்கு தேகாரோக்கியம் பாதிக்கப்படும். எதிர்பாராமல் சில நண்பர்களுடன் தகராறு

விரோதமா கொள்ளநேரும். கல்யாணமாகாத வர்களுக்கு ஏமாற்றங்களின்றி விவாஹமாகும். இரண்டாம் பகுதியில் செலவு உச்சத்தை அடையும். புத்தகம் எழுதுபவர்களானுல் புதிய வெளியீடு களுக்கு எழுத இம்மாதம் தகுதியானது. ஊழியர் களுக்கு ஊதிய உயர்வும், சூழ்நிலையில் சந்தோஷகர மான மாறுதல்களும் ஏற்படும். வியாபாரிகளுக்கு இம்மாதம் அதிருஷ்டகரம். இதுவரையில் முடிவு பெருத பழைய வியாபார ஒப்பந்தம் லாபகரமாகத் திடீரென்று நிறைவேறும். உற்சாகத்தைத் தருமள வில் லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம்காண் பதற்கு இரண்டாம் பகுதி ஏற்றதல்ல. இம்மாதத் தில் ஒரு பிரயாணமோ,யாத்திரையோ சம்பவிக்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளுடன் தகராறு ஏற் படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கூட்டாளி முறைக்கு இரண்டாம்பகுதி தகுதியாயிருக்கும். இரண்டாம் பகுதியில் தியாகம் செய்யும்படியாயு மிருக்கும்.

அக்டோபர் 18, 23, 25, 30, நவம்பர் 4, 5, 10, 12' 13, தேதிகள் இவர்களுக்கு விசேஷமானவை.

## விருச்சிகராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிகராசிக்காரர்களுக்கு தனம்சம்பந்தப்பட்ட கிரஹமான குரு இப்போது தன் சொந்தவீட்டுக்கு-தனுசு-திரும்பிவிட்டார். எனவே குடும்பம்,செல்வம் இரண்டு விஷயங்களிலும் உண்மையில் சந்தோஷத் தைக் கொடுக்கும் நிலைமை இது. லௌகிக வாழ்க் கையில் அதாவது தொழில் சுகம், கவுரவம், பண வசதிகள், முதலிய அம்சங்கள் எல்லாம் குரு வின் பிரகாச விட்சண்யத்தைப் பெறுகின் றன. ஜாதகத்தின் நிலைமை இந்த ராசிக் காரர்களுக்கு இப்போது எதிராக இல்லாம லிருக்கும்பட்சத்தில், தற்கால நடப்பு மகிழ்ச்சி கரமாகவே விளங்கும். மாறுதல்கள் எதையும் இச் சந்தர்ப்பத்தில் செய்வது சரியல்ல. நண்பர்கள் யோசனைகளை நம்புவதாலும் பயனிராது. எல்லாக் காரியத்தையும் சொந்தமாகக் கவனிப்பதுதான் தரம். 10-வது இடத்தில் சனியும், குருவும் இருப்ப தால் வெற்றிகிடைப்பது தாமதப்படுமேயன்றி தோல்வி ஏற்படாது. மனைவி அல்லது புருஷன் தேக சுகம் அடிக்கடி பாதிக்கப்படுமாயினும் குடும்ப சுகத்துக்குஇரண்டாம் பகுதிவிசேஷம்.12-வதுஇடத் தில் நீசம் பெற்றுள்ள சூரியனைச் சனி பார்ப்பதால் ஏதாவது ஒன்றில் ஏமாந்து போகும்படி நேர லாம். இந்த நிலைமை குரு விருப்பதால் சற்று குறையும்.உத்தியோகத்தில் உபாயமாக ஒரு மாறுத லேற்படலாம், அல்லது விரும்பும் இடத்துக்கு மாறிப்போகமுடியும். உற்ருர் உறவினரிடமிருந்து பிரிந்து வாழ்பவர்கள் இச்சந்தர்ப்பத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியும். பொதுவாகக் குழந்தை களுடைய விவகாரங்கள் திருப்திகரமாயிருக்கும். இம் மாதம் வர்த்தகர்களுக்கு அதிருஷ்டகரம். இரண் டாம் பகுதி லாபத்துக்கு ரொம்ப விசேஷம். கூட்டுமுறையில் சற்று மாறுதல் ஏற்படும். குடும்ப வாழ்வு அபிவிருத்திகரமாக மாறுதலடையும்.

அக்டோபர் 18, 19, 21, 25, 27, 29, 30, நவம்பர் 4, 5, 8. 9, 11. 13 தேதிகள் இவர்களுக்கு உயர்ந் தவை.

## தனுர்ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

தனுர் ராசிக்காரர்களின் கிரஹப் போக்குசென்ற மாதத்திலிருந்ததைக்காட்டிலும் இம்மாதம் சுலப மானதாயிருக்கும். எண்ணங்கள் அநேகமாக இக் கட்டத்தில் நிறைவேறும். கண்மூடித்தனமாகச் செலவு செய்யும்படியிருக்கும். முன்னையும்விட குடும்ப வாழ்வு சந்தோஷகரமாக விளங்கும். ஜாகை மாற்ற விரும்பியிருந்தால் அவ்வெண்ணம் கூடிய சீக்கிரம் நிறைவேறும். ஆனுல் புதிய இடம் அதிகச் செலவைத்தான் கொடுப்பதாயிருக்கும். பண விஷயத்தில் வசதி பெருகியிருப்பது தெரியவரும். மொத்தமாகத் தொகைக் கிட்டும்; அல்லது ரொம்ப நாளாக வரவேண்டிய பாக்கி கைக்கு வந்து சேரும். சிலருக்குத் தங்கள் சகோதரர், அல்லது சகோதரிகளுக்கு உதவிசெய்ய நேரும். ஹேஷ்யம், போட்டிப்பந்தயம், குதிரைப் பந்தயம் முதலியவற்றில் சிலருக்கு லாபம் கிடைக்கக் கூடும். நண்பர்கள் ஏற்படுவார்ளென்ருலும், சிலர் விரைவில் எதிர்க்க ஆரம்பித்து விடுவார்கள், உதவிக்கு அவர்களையெல்லாம் நம்பக்கூடாது, ஏனெனில் அவர்கள் உதவியை செய்வதாக உறுதி சொல்வார்களேயன்றி, கொடுத்த வாக்கை நிறை வேற்றமாட்டார்கள். உத்தியோகத்தில் அநுகூல முண்டு: அல்லது விரும்பிய விஷயம் கைகூடும். பெரிய நபர்களுடன் தொடர்புகள் ஏற்படும். அவ சியமானபோது இவர்களின் உதவி கிட்டும். இரண் டாம் பகுதியில் உத்தியோகத்தில் சில்லரை மாறு தல்கள் ஏற்படலாம். குழந்தைகளின் விஷயமாக இன்னும் கொஞ்சகாலம் கிலேசமுறும்படியிருக்கும். கடன் வாங்குவது, கொடுப்பதுகூடாது. விவாக மாகாதவர்கள் இந்த சமயத்தில் கணவனையோ அல் லது மனைவியையோ தேர்ந்தெடுத்துக்கொள்ள இய லும். வியாபாரிகளுக்கு முதல் பகுதி அதிருஷ்டகரம். நஷ்டமே ஏற்படாதென்று சொல்வதற்கில்லை. ஏனெனில் செவ்வாய் 12-ல் இருக்கும் நிலையும், சனி இருக்கும் நிலையுமே இதற்குக் காரணம். புதிதாக ஹேஷ்யங்களில் இறங்கக்கூடாது. எதிரிகள் இந்த ராசிக்காரர்களுக்குத் தெரியாமல் விரோத வேலை களைச் செய்து வருவார்கள்.

அக்டோபர் 18, 19, 23, 26, 27, 30, நவம்பர் 4, 11, 14 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

## மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோ ணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

மகர ராசிக்காரர்களுக்கு வருங்காலம் மெத்த கடினமாயிருக்குமென்று தோன்றுகிறது. இந்த மாதம் சுலபமாயிராது. இம்மாதத்தில் முக்கியமாக விளங்கக்கூடிய அம்சங்கள் (1) உத்தியோ கத்திலுள்ள நிலைமை: (2) தேகாரோக்கியம். இவற் ருல் மன அமைதியே இராது. ஆகவே மனமும், உட

லும் சிரமப்பட நேரும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். வேலையிலிருப்பவர்களுக்கு ஏமாற்றமேற்படும்; வேலை போனாலும் போகும். நல்ல காரியங்களுக்காக அதிகம் செலவு செய்ய நேரும், சகோதரர்களுக்கோ, உறவினர்களுக்கோ உதவி செய்யும்படியிருக்கும். பெற்றோர்கள் மூலமாகவோ அல்லது மேலதிகாரிகளின் மூலமாகவோ கவலைகளேற்படும். தூர இடத்தி லிருந்து வரும்சேதிகள் சந்தோஷகரமாயிராது. புதிய நண்பர்களேற்படுவர். இவர்களில் ஒருவர் திகைப்பேற்படும் வகையில் விரோதமாக மாறுவார். உத்தியோகத்தில் உருப்படியாக எவ்வித அனுகூலமு மிராது. இரண்டாம் பகுதியில் குழந்தைகளில் ஒருவரைப்பற்றிக் கவலையேற்படும். பார்வை சரியில் லாதவர்கள் கண்ணைக் கவனித்துக்கொள்ளவேண் டும். குடும்பத்தில் இது சந்தோஷகரமான காலமா யிராது. மனைவியோ, அல்லது புருஷனோ அடிக்கடி தேக அசௌகரியமடையும்படி நேரும். வியாபாரிகளுக்கும் இது நல்ல சமயமல்ல. ஹேஷ் யங்களையெல்லாம் இவர்கள் பிந்தியமாதங்களுக்கு ஒத்தி வைத்துக்கொள்வது நல்லது. வாசஸ்தலத் தைப்பற்றி அமைதியில்லாத ஒருநிலைமை ஏற்படும். கூட்டாளிமுறையை உபாயமாக மாற்றிக்கொள்ள லாம்.

அக்டோபர் 18, 23, 27, 30 நவம்பர் 3, 5, 9, 11, 14 தேதிகள் இவர்களுக்கு அனுகூலம்.

## கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

சென்றமாதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்தமாதத்தில் கும்பராசிக்காரர்களுக்கு சந்தோஷ கரமான அனுபவங்களெல்லாம் ஏற்படுமென்று கிரகங்களின் போக்கிலிருந்து தெரிகிறது. பண அபிவிருத்தி, வெளியிடங்களிலுள்ள சௌஜன்ய நிலை, உத்தியோகப்பொறுப்பு, நம்பிக்கை முதலிய வையெல்லாம் அபிவிருத்தி பெறும்படி செய்யக்கூடிய நிலையில் செவ்வாயும், குருவும் ஸ்தானவிசேஷம் பெற்றிருக்கின்றனர். சுக்கிரன், சூரியன் இவர் களுடைய நிலைமை திருப்திகரமாயில்லை. இது முதியவர்களுடனோ அல்லது பெற்றோருடனோ கொண்டுள்ள உறவுக்கு உகந்ததாயில்லை. ராகுவும் செவ்வாயும் உத்தியோகத்தில் விரும்பியபடி மாறு தலைத் தேடித்தர உதவிகரமாயிருப்பர். இந்த நிலையில் ஏற்படும் மாறுதல் ஊதிய உயர்வையும், அதிகரித்த பொறுப்பையும் உண்டுபண்ணும். சுயேச்சையாக உள்ள கும்பராசிக்காரர்களானால் வருமானத்துறையைப் பெருக்கிக் கொண்டு உறுதி படுத்திக்கொள்ளவும் இந்த சந்தர்ப்பம் வசதியா யிருக்கிறது. சுயேச்சையாக இருப்பவராயின் செல் வாக்கு, பொதுஜனப் பாராட்டு இவற்றால் வரு மானம் வெகுவாகப் பெருகும். சனி 6-ல் இருப்பதா லும், 7-வது வீட்டுக்குடையவன் 9-ல் நீசம் பெற்றி ருப்பதாலும் குடும்ப வாழ்வு திருப்திகரமாயிராது. ஒரு தூரதேசப் பிரயாணம் உண்டு. இரண்டாம் பகுதி தரமானதில்லை. நம்பிக்கையெல்லாம் நிச்சய மாக கைகூடுமென்ற எண்ணமிருக்குமேயன்றி இறுதியில் பயனிராது. புதிய தொடர்புகள், சிநே கம் இவை அனுகூலகரமாக ஏற்படும், சனி, செவ் வாய் லக்னத்தைப் பார்ப்பதால் வேலையில் பொறுப்பு அதிகம் கூடும்.

தனிப்பட்ட முறையில் இருப்பவர்களுக்கு தொழில் வளப்பமுற்று லாபம் கிட்டும். சில சம யங்களில் அருவருக்கத்தக்க, நம்பிக்கைக்குப்பாத் திரமில்லாத சூழ்நிலைமையில் சிக்க நேரும். குழந்தை களின் எதிர்காலம்பற்றிக் கவலைப்படும்படியிருக் கும். சில அபூர்வ இனங்களில், ஜாதகத்தில் கிரஹங் கள் மோசமான நிலையில் இருந்தால் கோர்ட்டு விவ காரங்கள்கூட ஏற்படுமென்று சொல்லலாம்.

அக்டோபர் 18, 22, 23, 25, 27, 31, நவம்பர் 4, 5, 8, 9, 14, தேதிகள் இவர்களுக்கு வசதி ஏற்படும் நாட்கள்.

## மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி' ரேவதி முடிய)

பொதுவாக மீனராசிக்காரர்களுக்குச் சாதகமான நிலைமையிலேயே பெரிய கிரஹங்களெல்லாம் இருக் கின்றன. உத்தியோகத் துறையில் பண விஷயத் தில் கொஞ்சம் சகாயமேற்படும். செவ்வாயும், சனி யும், 12-வது வீட்டைப் பார்ப்பதால் உத்தியோக நலன் பாதிப்படுமென்றோ, அல்லது எதிர் பாராத கோளாறுகள் ஏற்படுமென்றோ பயம் ஏற்படும். கடன் கொடுப்பதோ வாங்கு வதோ கூடாது. சில இனங்களில் திருடு போவதற்கும் இடமுண்டு. உத்தியோகத்தில் அதிக மாக வேலை சுமரும். அல்லது இன்னொரு வேலையை யும் பார்க்கும்படியிருக்கும். ஒரு தூரதேசப் பயணம் ஏற்படலாம். குடும்பத்தில் முக்கிய மான சுபகாரியம் நிகழும். 8-வது இடத் தில் கேதுவும், சூரியனும் இருப்பினும் பொது வாக ஆரோக்கியம் அபிவிருத்தியடையும். தவ றான ஹேஷ்யங்களோ, முதலீடுகளோ கூடாது. இரண்டாம் பகுதியில் வீட்டில் யாருக்காவது வியாதி பிடிக்கும். சகோதரர் அல்லது சகோதரிபற்றி கவலைகளேற்படும். குடும்பத்தில் புருஷன் அல்லது மனைவி சுகவீனத்தால் சந்தோஷமாயிருக்க முடி யாது. வியாபாரிகளுக்கு இந்த சமயம் நல்லதல்ல. வியாபாரலட்சியங்கள் நிச்சயமற்றதாயிருக்கும். முதலீடுபோட்டு வியாபாரமெதையும் செய்யாமல் இருப்பது நல்லது. நவம்பர் 1-ந்தேதி இவர்களுக்கு நல்லதல்ல. பண நஷ்டமோ தேகநலமின்மையோ அல்லது இரண்டுமேயோ ஏற்படும். இரண்டாம் பகுதியில் கூட்டாளி முறை லாபகரமாயிராது. தப்பு அபிப்பிராயங்களை விலக்கவும்.

அக்டோபர் 18, 22, 23, 25, 31, நவம்பர் 3, 4, 5, 9, 11, 14, தேதிகள் இவர்களுக்கு பயன்தரத்தக்கவை

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
5, வாசுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.

# பெண்மை, அழகு, நாகரிகம்

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

தமிழ் நாடெங்கும் 'நான், நீ' என்று போட்டி போட்டுப் 'பாரதி விழா'க் கொண்டாடியிருக்கிறார்கள். வட இந்தியாவிலும் தமிழர்கள் கூடி வசிக்கும் பம்பாய், மதுங்கா, பூனா, கிர்க்கி, கல்கத்தா, டெல்லி முதலான இடங்களிலும், ஆண்களோடு பெண்களும் பாரதி விழாவைச் 'சரிநிகர் சமானமாய்'க் கொண்டாடினார்கள். 'ஆண்களோடு பெண்களும்—சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' என்று 'விடுதலை'ச் சங்கு ஊதிய கவிஞரின் விழாவைக் கொண்டாடுவதில் பெண்களும் சிரத்தை கொள்வது நியாயம்தானே.

## கமலாவின் கலக்கம்

ஆறிலொரு பங்கினரான 'பறையருக்கும் தீயருக்கும் புலையருக்கும் விடுதலை' என்று பாடியவர், சமுதாயத்தில் சரிபாதியாகவுள்ள பெண்களுக்கும் 'விடுதலைக்கும்மி' பாடியிருக்கிறார். இந்தக் கும்மியை இந்நாளில் பள்ளிக்கூடங்களிலும் பாடுகிறார்கள். சிறுமிகளின் பள்ளிக்கூடங்களிலும்தான்,

ஆனால் தமிழ் நாடு முழுதும் குலுங்கிடச் செய்த பாரதி பாடல்களில்,

கும்மியடி தமிழ் நாடு முழுவதும்
  குலுங்கிடக் கைக்கொட்டி கும்மியடி

என்று தொடங்கும் "பெண்கள் விடுதலைக்கும்மி" எனக்கு—என்னவோ?—மற்றப் பாட்டல்களைப் போல் அவ்வளவாகப் பிடிக்கிறதில்லை' என்றாள் கமலா.

## 1

## பாரதியாரின் புதுமைப்பெண்

★

'ஏனம்மா, அப்படி?'

நம்மைப் பிடித்ந பிசாசுகள் போயின
  நன்மை கண்டோமென்று கும்மியடி

என்று பாடிக்கொண்டு நன்றாய்க் கும்மியடிக்கலாமே' என்றேன்.

அந்த அடிகள், யாருக்கெல்லாமோ பலமான அடிகள் கொடுப்பதுபோலக் காண்கின்றனவே! என்றாள் அவள்.

மாமியார்களின் கொடுமை, கர்நாடகப் பழக்க வழக்கங்களின் கொடுமை முதலியவற்றிலிருந்து விடுதலை பெற்றிருக்கும், அல்லது விடுதலை பெற்றதாகக் கருதியிருக்கும் நகரவாசிகளான சில புதுமைப் பெண்களுக்கு, 'இப்படியெல்லாம் அடிகள் விழவேண்டியதுதான்' என்றும் தோன்றக் கூடும். ஆனால் 'பொதுவாக இந்தியப் பெண்மணிகளுக்கெல்லாம் இத்தகைய வீராவேசத்தைக் காட்டிலும் காந்தியடிகள் அளிக்கும் தார்மிக தைரியமே மிகவும் பிடித்திருக்கும் என்பது என் அபிப்பிராயம்' என்றாள் கமலா.

'பாரதியாரும் காந்தியடிகளைப் போல் தர்மவழியையும், தூய ஒழுக்கத்தையுமே பெண்கள் வீரச் செயல்கள் புரிவதற்கு இன்றியமையாத சாதனங்களாய்க் காட்டுகிறார்' என்றேன்.

கமலாவோ,

ஏட்டையும் பெண்கள் தொடுவது
  தீமையென்(று) எண்ணி இருந்தவர்
    மாய்ந்து விட்டார்."

என்று பாடிவிட்டு, 'காந்தியடிகளின் புதுமைப்பெண், "எண்ணியிருந்தவர் திருந்திவிட்டார்" என்று சொல்லமாட்டாளா!' எனக் கேட்டாள்.

இந்தியப்பெண்கள் அபலைகள் அல்ல. எத்தனையோ வீரச் செயல்களைச் செய்து புகழ் பெற்றிருக்கிறார்கள்' என்றேன் நான். கத்திகளையோ, வேறு ஆயுதங்களையோ உபயோகித்துப் பெண்கள் அவற்றைச் சாதிக்கவில்லையே என்றாள் அவள்.

ஜான்ஸி ராணிஎன்றேன். நான். அப்படி மிகச்சிலரே ஆயுதபாணிகளாகி வீரப்புகழ்பெற்றவர்கள். பொதுவாக இந்தியப் பெண்கள் அஹிம்ஸா தர்ம முறையில் ஆத்ம வீரம் விளைத்தவர்களே' என்றாள் கமலா.

உண்மைதானே அபலைகள் என்பதெல்லாம் ஸ்தூல பலக் குறைவைச் சுட்டிக்காட்டுவதுதான். வெள்ளைக்காரர் 'Weakersex' என்பது போலத்தான். உண்மையான பெண்மை சக்தி மயமானது என்பது இந்திய ஞான சிரேஷ்டர்களுக்கும் உடன்பாடுதான். இத்தகைய சக்தியை மகாத்மா காந்தி

ஸ்ரீமதி ஸரோஜினி.

யடிகள் ஒருவாறு தமது சத்தியாக்கிரக சுதந்திரப் போராட்டத்திலும் பயன்படுத்திக்கொண்டார்.

## காந்தியமும் பாரதியமும்

மகாத்மாவின் சத்தியாக்கிரக அஹிம்ஸா தர்மப்போராட்டம் 'பெண்கள் விடுதலைக்கு நல்ல சந்தர்ப்பங்களை அளித்தது. சாதாரணப்பெண்மை தன் சக்தியை உணர்ந்துகொண்டது மட்டுமில்லை ஸரோஜினிதேவி, விஜயலட்சுமி பண்டிட், ராஜகுமாரி அமிர்தகௌர் முதலான கல்வியறிவில் சிறந்த பெண்மணிகளும், பாரத சக்தியையும், அஹிம்ஸா தர்ம சக்தியையும் உள்ளபடி அறிந்துகொண்டு ஒரு புதுமைப் பிறவி பெற்றுவிட்டதுபோல் விளங்கினார்கள், இன்றும் விளங்குகிறார்கள் நமது மாகாணத்திலும்,

> பட்டங்கள் ஆள்வதும்
> சட்டங்கள் செய்வதும்
> பாரினில் பெண்கள்
> நடத்த வந்தோம்.

என்று முன்வந்த டாக்டர் முத்துலட்சுமிரெட்டி போன்றவர்களும் காந்தியத்தைப் பயன்படுத்திக்கொண்டவர்களே.

## சாதம் படைத்த ஸரோஜினி

காந்தியத்தை உணர்ந்துகொள்வதற்குமுன்பே பாரதியார் நம் தேசப்பண்பாடுகளை நன்குணர்ந்தவராதலின், வெறும் கலாசாலைப் படிப்பையும், பல்கலைக் கழகப் பட்டங்களையும் பிரமாதப்படுத்தாமல்,

> சாதம் படைக்கவும் செய்திடுவோம்,
> தெய்வச் சாதி படைக்கவும்
> செய்திடுவோம்

என்பதைப் பெண்களின் லட்சியமாகக் காட்டியுள்ளார் புதுமைப் பெண்கள் பழைய இந்திய வழிகளைத் துறந்துவிட வேண்டுமென்று சொல்லாமல்,

> மாதர் அறங்கள் பழமையைக் காட்
> டிலும் மாட்சி பெறச்செய்து வாழ்
> வமடி

என்றே முயலவேண்டும் என்கிறார்.

ஸ்ரீமதி விஜயலட்சுமி.

இப்போது மேன்மைதங்கிய கவர்னராக வீற்றிருக்கும் ஸரோஜினிதேவி, கவிகோகிலமாகவும் பிரசங்கமாரியாகவும் இருந்து நம் இந்திய ஜாதியைப் பாரதியார் சொல்லும் **தெய்வஜாதியாக்க** முயன்றவர் என்பதை அறியாதர் இல்லை. இவருக்குச் **'சாதம் படைக்கவும்'** தெரியுமென்றால் நமது கலாசாலைப் பெண்களுக்கு அது ஓர் அதிசயமாகவும் தோன்றக்கூடும். ஸரோஜினிதேவியாரே ஒருசமயம், வசனத்திற்கும் கவிதைக்கும் இடையே ஊஞ்சலாடி தம் பிரசங்கம் ஒன்றினிடையே, **சாதம் படைப்பதில்** தமக்குள்ள திறனையும் பெருமையாக வற்புறுத்திப் பேசினார்.

இப்போது மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரலாக இருக்கும் ராஜாஜியையே ஒரு சாட்சியாக்கினார் மேன்மைதங்கிய கவர்னர் ஸரோஜினி தேவியார்,

> சாதம் படைக்கவும் செய்திடுவோம்!

என்ற அந்தத் தமது அருந்திறனுக்கு! சென்னை மாகாணத்தார் ரஸித்து ருசிக்கும் ரஸத்தை ராஜாஜியும் பாராட்டி ருசிக்குமாறு தயாரித்து விருந்துசெய்தாராம். இன்றைய ஸரோஜினி பி.ஏ. அல்லது எம்.ஏ. நம்புவாரா?

## கனவுப் பெண்

ஸரோஜினிதேவியைப் பாரதியார் அந்நாளிலேயே அறிந்தவர்தான். ஆனால் பாரதியார் புதுமைப் பெண்ணை நனவில் கண்டதைக் காட்டிலும், கனவில் கண்டார்.

> முன்னிக் கவிதைவெறி முண்டே நனவழியப்
> பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
> நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேன் யான்!

என்றுதான் அவர் சொல்லக்கூடும்.

> போற்றி போற்றி, ஓர் ஆயிரம் போற்றி, நின்
> பொன்னடிக்குப்பல் ஆயிரம் போற்றி காண்,
> சேற்றி லேபுதி தாகமு ளைத்ததோர்

ஸ்ரீமதி ருக்மணிதேவி.

செய்ய தாமரைத் தேமலர் போல்,
ஒளி
தோற்றி நின்றனை பாரத நாட்டிலே;
துன்பம் நீக்கும் சுதந்திர பேரிகை
சாற்றி வந்தனை, மாதரசே! எங்கள்

சாதி செய்த தவப்பயன் வாழிநீ!

என்று தொடங்கும்போதே, இந்தப் புதுமைப் பெண் கனவுப் பெண்தான்! ஒரு புதிய சுதந்திர யுகத்தில் புதிய அருணோதய வேளையின் வசீகரமான சாயலுடன் தோன்றப் போகிறாள் என்று நம் கவிஞர் கனவு காண்கிறார்' என்பதாக நாம் பளிச் சென்று தெரிந்துகொள்கிறோம். அந்தக் கனவுப் பெண்ணை அவர் பார்த்துத்தான், 'பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி' என்கிறார்.

தற்கால இந்திய வாழ்க்கையாகிய சேற்றிலே புதிதாக முளைக்கும் செந்தாமரைதன்! சுதந்திர பேரிகை கொட்டி வரும் மாதரசிதான்!

எனினும் இந்தப் புதுமைப் பெண் இந்தியாவின் பழமையான பண்பாடுகளைப் புறக் கணிப்பவள் அல்ல; தொன்று தொட்டுவரும் ஆத்ம சம்பத்தை இழக்கக் கூடியவளும் அல்ல.

'மாதர்க்குண்டு
சுதந்திரம்' என்று
[நின்
வண் மலர்த்திரு வாயின்
மொழிந்த சொல்—
நாதம் தான் அது
நாரதன் வீணையோ?
நம்பிரான் கண்ணன்
வேய்ங்குழல்/
[இன்பமோ?

என்றுபாடுவதால், இந்தியப் புதுமைப் பெண் மேலை நாட்டுப் பெண்களின் புரட்சி வழியைப் பின்பற்றிப் பழைய நல்லற தொடர்புகளை அறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது தெளிவு. சுதந்திரப்பெண் சுந்தத்ரப் பெண்ணாகவும் இருக்கலாம், இருக்கவும் வேண்டும் என்பது பாரதி கனவு.

## சுதந்திர கோகிலம்

இவள் இடிக்குரலில் தன் உரிமைகளை வற்புறுத்திப் போராடித் தன் பெண்மையையும் ஆத்மசக்தியையும் இழந்துவிடப் போவதில்லை. 'வீணா கானமோ? வேணு கானமோ?' என்று சொல்லும்படி இனிமையாக அன்புக்குரலில் சுதந்திரம் வேண்டுகிறாளாம். இங்கே நாரதரையும், கண்ணனையும் நினைப்பூட்டிப் பாரதியார், இந்தப் புதுமையும் அந்தப் பழம் பண்பாடுகளின் ஒரு மறு மலர்ச்சிதான் என்பதை வற்புறுத்துகிறார். 'தாடகைப்பாட்டி' போலவும் 'சூர்ப்பணகைப் பிராட்டி'போலவும் 'புதுமைப்பெண்' பரிணமித்து விடலாகாதே!-என்று அஞ்சித்தான் பாரதியார்,

நாதம் தான் அது நாரதன் வீணையோ?
நம்பி ரான்கண்ணன் வேய்ங்குழல்/
இன்பமோ?

எனப் பாடுகிறாரோ என்று கூடத் தோன்றுகிறது.

ஆனால் பெண்கள் சிறிதும் அச்சம் இல்லாமல் வாழ வேண்டும் என்பதை பாரதியார் வற்புறுத்துகிறார். 'உங்களுடைய சொந்தச் சக்தியை நம்பியே நீங்கள் வாழவேண்டும்.........நீங்கள் பயந்துகொண்டு வாழ்ந்தால் காலிகளின் அட்டூழியங்களுக்கு விரைவில் பலியாகிவிடுவீர்கள்' என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். இக்கருத்தையே பாரதியாரும்,

நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வை
[யும்,
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்.
திமிர்ந்த ஞானச்
செருக்கும் இருப்ப
[தால்
செம்மை மாதர் திறம்புவ
தில்லையாம்.

என்று பாடுகிறார்.

தீண்டாமை விலக்கு முதலான சீர்திருத்தத் துறைகளில் பெண்கள் முன் வந்து வழிகாட்ட வேண்டும் என்பது மகாத்மாவின் உறுதியான கொள்கை. இக்கொள்கையைத் தான் பாரதியாரும்,

மூத்த பொய்ம்மைகள்
[யாவும்
அழிப்பராம்,
மூடக் கட்டுகள்
யாவும் தகர்ப்பராம்

என்று ஆவேசமாய்ப் பாடியிருக்கிருர்.

பல நாடுகளிலும் சஞ்சரித்து, பற்பல நூல் கற்று, வாழ்க்கையின் நுட்பங்களை அறிந்துகொண்டு, புதுமைப் பெண் பாரததேசத்திற்குப் பணி செய்ய வேண்டும் என்பது பாரதியார் கனவு.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள்
தேரவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை
கொணர்ந்திங்கே,
திலக வாள்நுத லார்நங்கள் பாரத
தேசம் ஓங்க உழைத்திடல்
வேண்டுமாம்

என்ற பாரதியாரின் கனவுப் பெண்ணிடம், **விஜய லட்சுமி பண்டிட், கமலாதேவி சட்டோபாத்யாய, ருக்மிணி தேவி** முதலானவர்களின் முக ஜாடைகளைப் பார்க்கிருேம். அன்று கனவிலே வந்த சுதந்திர கோகிலம் இன்று உலகமெங்கும் பறந்து பார்ப்பது போலிருக்கிறது!

## காட்டுத் தீயல்ல!

பாரத தேசத்தின் புதுமைப் பெண் எல்லாவற்றுக்கும் மேலாக மனித வாழ்க்கையில், காந்தியடிகள் சொல்லுகிறபடி அஹிம்ஸா தர்மத்தை நிலைநிறுத்தப் பாடுபட்டுப் பாரத நாட்டின் குல விளக்குகளாய் விளங்க வேண்டும். இது பாரதியார் புதுமைப் பெண்ணின் லட்சியமுமதான் என்று நம்புகிறேன்.

இப்படி நான் சொன்னதும் கமலா பளிச்சென்று, 'இத்தகைய அருமையான 'புதுமைப் பெண் பாடல்கள்' என்ற பாரதியாரின் நாரத கானத்திலும்,

நாணும் அச்சமும்
நாய்கட்கு வேண்டுமாம்

என்று வருவது ஏதோ ஓர் அபஸ்வரம்போலத்தான் என் புத்தியில் படுகிறது' என்ருள்.

பாரதியாரின் லட்சியப் பெண்மை குறித்துப் பேசுவோரில் சிலரும், ஏதோ போர் தொடுப்பவர்களைப்போல்,

'நாணும் அச்சமும் நாய்கட்கு
வேண்டுமாம்'
'எண்ணி யிருந்தவர் மாய்ந்து
விட்டார்'
'வெட்டி விட்டோமென்று கும்மியடி'
'வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்'

என்ற வீராவேச வாக்கியங்களை இடிக்குரலில் 'இதுதான் பாரதி கொள்கை' என்று முழக்குகிருர்கள்.

இத்தகைய ஆசாமிகளில் ஒருவர் மாதர் கூட்டம் ஒன்றில் பாரதியாரைக்குறித்துப் பிரசங்கிக்கும்போது,

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்து வோம்

என்பதையே பாரதியாரின் அதி முக்கியமான கொள்கைபோல் திரும்பத் திரும்பச் சொன்னர். இந்த ஆவேச வாக்கிலும்,

கொளுத்துவோம்!
கொளுத்துவோம்!
கொளுத்துவோம்!

என்று மும்முறை சங்கநாதமும் சிங்கநாதமும் செய்தார்.

பெண்களல்லவா? 'கொளுத்துவோம்' என்பதை ஏன் இப்படி அழுத்துகிருர் என்று அதிசயித்தார்கள். பிரசங்கி, அந்த அழுத்தத்திற்கும் உட்பொருள் கூறி வியாக்கியானம் செய்தார். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை'ப் பாரதியார் புதைத்துவிடுவோமென்று சொல்லவில்லை. 'புதைத்தாலும் மூன்ரும் நாள் உயிர்த்தெழுந்து மீண்டும் வந்துவிடுமோ?' என்று அஞ்சி 'கொளுத்துவோம்' என்ருராம் பாரதியார். இப்படியெல்லாம் விநோத விபரீத வியாக்கியான பயங்கரர் கிளம்பித்தான் பாரதியாருக்குப் புதியதொரு பெருமை தேட வேண்டுமா?

பாரதியாரின் 'புதுமைப் பெண்'ணைச் சரியாகத் தெரிந்துகொண்டால், இந்தியாவின் லட்சியப் பெண்மைக்கும் இலக்கியப் பெண்மைக்கும் பொருத்தமாகவே நம் தேசிய மகாகவிஞரின் லட்சியமும் அமைந்திருக்கிறது என்பது தெரியவரும். புதுமைப் பெண்ணுக்கு நாகரிகத்தோடு அழகும் வேண்டும், பழைய பண்பாடும் வேண்டும் என்பதுதான் பாரதியாரின் அந்தரங்க சித்தாந்தமாக இருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. சுருங்கச் சொன்னல், பெண்மை காட்டுத்தீயல்ல. குலவிளக்கே, வீட்டையும் நாட்டையும் விளக்கும் குலவிளக்கு என்பதே பாரதி மதம் என்றேன்.

'உண்மைதான் பங்கஜம்! இந்த மதத்திலும் சிறிது மதாவேசம் இருக்கிறது. காந்தியடிகளே சிறிதும் ஆவேசம் இல்லாமல் உள்ளொளியால் பெண்ணொளி கண்டவர், இந்தியப் பெண்மையின் உண்மை கண்டவர் என்றுதான் சொல்ல வந்தேன் அம்மா!' என்ருள் கமலா.

## எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப்பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக "வாரப்பதிப்பு" என்று எழுதியனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப் படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் விலாசமிட்ட தபால் கவர்களையோ, தபால் தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.




ஸீதாராமன் ஊருக்குப் புறப்பட்ட அன்று இரவு ராமனாதனுக்கு மன அமைதி கெட்டுவிட்டது. தூக்கம் விலகியது. தைரியம் தளர்ந்தது, பயம் சூழ்ந்து கொண்டது. தவிப்பு அதிகரித்தது. தான் பின்வாங்க முடியாத ஒரு கட்டத்தை உத்தேசித்து விரைந்து செல்வதை அவன் உணர்ந்தான். கூடுவிட்டுக் கூடு பாய்வதுபோல் ஒரு கட்டுப்பாடான சூழ்நிலையை நீக்கி மற்றொன்றில் பிரவேசிப்பதற்குத் தான் ஆயத்தமாகி வருவதைக் கண்டு கொண்டான். புரட்சிகரமான அத்தகைய மாறுதல் ஏற்படத்தான் தீர்க்கதரிசனத்துடன் முன் கூட்டியே சங்கல்பித்ததாக அவன் கூற முடியவில்லை. இருந்தாலும் மேலும் மேலும் அவனை இழுத்துச் சென்றது ஒரு சக்கரம். இல்லாவிட்டால் ஸீதாராமனுக்கு ஒரு தீங்கும் நினைக்காத அவன் ஸீதாராமனுக்குப் பரம விரோதியாக ஆகிவிட்டது எங்ஙனம்? குற்றவாளி தானாகவிருக்கக் குற்றம் ஸீதாராமனைப் பற்றிக் கொள்ளுவதை வரவேற்று, அவனுடைய வீழ்ச்சியில் தன் மீட்சியைப் பெறும் மித்ர துரோகியாகி வருகிறானல்லவா?

“ஏழை ஸீதாராமன்! ஒரு வைதிக குடும்பத்திற்குப் பிரகாசமளிக்க வேண்டிய விளக்குப் போன்றவன்! அடக்கமும், தாழ்மையும், பொறுமையும், ஒழுக்கமுடைய நல்ல மாணவன்! அரும்பு மலர்வதுபோல் இன்பமும், மறமும், அழகும் நிறைந்த, பேச்சுத்திறம் பொருந்தியவன்! என்னிடத்தில் ஸகோதர வாஞ்சையுடையவன். என்னை நம்பிப்பட்டணம் வந்து படித்துவருபவன்! ஸீதாராமனுக்குக் கடைசியாக நான் பகிர்ந்து கொடுத்த பயன் வாழ்க்கையை வெறுக்கச்செய்யும் ஆதாரமற்ற அபவாதமும், பயமும். ஆபத்துக்காலத்தில் மித்திரனைப் பரீக்ஷித்து அறிய வேண்டுமென்று நீதி சாஸ்திரம் கூறுகிறது. என் ஆபத்திற்குத் தன் கழுத்தைக் கொடுத்தான் ஸன்மித்திரனான ஸீதாராமன். அவனைப் பேராபத்தில் மாட்டிவிட்டு, யோக்யனாக நடிக்கிறேன் துர்மித்திரனாகிய நான். ஆனால் இந்த நிலைமை நீடிக்கமுடியாது. என் சாயம் வெளுக்கத்தான் போகிறது. ஆகையால் ஸீதாராமனை நிரபராதியாக்கி என் குற்றங்களை நானே ஒப்புக்கொண்டு, மனநிம்மதியடைய வேண்டுகிறேன். மேலும் உஷாவைப்பற்றிய என் மனோரதத்தைக் கேவலம் சொப்பனமாக மதித்துத்தள்ளிவிட் நான் நினைக்காதவரை. என் முற்போக்கான திட்டத்தை பிரகடனம் செய்யத் துணிந்தே ஆகவேண்டும். அதனால் வரக்கூடிய கஷ்ட நஷ்டங்களையும், மனஸ்தாபம் வேறுபாடுகளையும், நான் துணிவுகரமாய்த் தாங்கியே ஆகவேண்டும். வாழ்க்கைப்பாதை வெவ்வேறு திக்குகளில் பிரியும் கட்டத்திற்கு என்னைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. என் இஷ்டத்தை அனுசரித்து ஒரு திக்கில் காலடி எடுத்து வைக்க நான் இனித்தயங்குவதில் அர்த்தமில்லை. ஆகையால் காலையில் அப்பாவைப் பார்த்து எல்லாவற்றையும் உடைத்துப் பேசுவேன்.”

* * * *

மறுநாட்காலையில் வேங்கிட சுப்பையர் தன் மேஜையடியில் வெகு மும்மரமாய் வேலையிலாழ்ந்திருந்தார். ராமனாதன் பலதடவை மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவர் ரூம் பக்கம் போவதும், அப்போது சந்தர்ப்பமில்லை என்று நினைத்துத்திநம்புவதுமாக இருந்தான்.

வெகுநேரம் கழித்துப் பேனாவைக் கீழேவைத்துவிட்டு மூக்குக் கண்ணாடியைக் கூட்டில் போட்டுவிட்டு ஸ்ரீமான் வெங்கிடசுப்பய்யர் ரூமைவிட்டு வெளியே வந்தார். ஸ்னான போஜனாதிகளை முடித்துக்கொண்டு அவர் ஆபீஸுக்குக் காரில் ஏறும் சமயம் ராமனாதனைக் கூப்பிட்டார். “ராமனாதா! இன்று நானே நாக்பூர் போகிறேன். நேரில் போய்க் காந்திமதிக்கு வரனை நிச்சயம் செய்துவிட்டு கோபிநாத்கோமதியுடன் இரண்டு மூன்றுதினங்களில் திரும்புகிறேன். நேற்று நான் சொன்ன செக்கை உன்பேருக்கு எழுதியிருக்கிறேன். அதைமாற்றி ரூபாய் ஆயிரத்தையும் ஆபீஸில் என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிடு. ஆபீஸில் கொஞ்சம் ஜோலியிருப்பதால் அதைப் பார்த்துவிட்டு அப்படியேஸெண்டராலுக்கு நான் போவேன். நீ பாங்குக்குப் போய்விட்டு என்னை ஒரு மணிக்குள் வந்து பார்.”

ராமனாதன் ஆபீஸிலிருந்து அவர் தனியே ஊருக்குப் புறப்படும் சந்தர்ப்பம் தனக்கு அனுகூலமாயிருக்கும் என்று நினைத்தான். கார் நகர்ந்தது.

ராமனாதன் அப்பா செக் புஸ்தகத்தைப் பார்த்துச் செக்கை எடுத்துக்கொள்ள உள்ளே சென்றான். செக்கில் ‘வி. ராமனாதன்’ என்று பணம் பெற வேண்டியவரின் பெயர் ஸ்பஷ்டமாய் எழுதப்பட்டிருந்தது. கீழே அப்பா

கையெழுத்து வைத்திருந்தார். தேதி சரியாய் போடப்பட்டிருந்தது. தொகையின் எண் ரூ. 1000 என்று குறிக்கப்பட்டிருந்தது ஆனால் எழுத்தில் ரூபாய் ஆயிரம் என்று எழுதப்படவில்லை. அவசரத்தில்மறந்துவிட்டார்போலும். ராமனாதன் அப்பா பேனாவை எடுத்து மையில் தோய்த்து ரூபாய் ஆயிரம் என்று எழுத்தில பூர்த்தி செய்துகொண்டான். பின்பு போஜனாதிகளை முடித்துகொண்டு செக்குடன் பாங்குக்குப் புறப்பட்டான்.

பாங்கில் இவன் செக் உள்ளே அனுப்பப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் ஏஜெண்டு ஒரு பியூனை விட்டு இவனை உள்ளே அழைத்தார். தன் எதிரில் இவனை உட்காரக் சொல்லி அன்புடன் வரவேற்றார். பிறகு வெகு நேரம் அவர் தன் குமாஸ்தாக்கள் கொண்டு வரும் கணக்குப் புஸ்தகங்கள், செக்குகள், பாண்டுகள் முதலியவற்றை பரிசிலனை பண்ணி கையொப்பமிட்டுக்கொண்டிருந்தார். ராமனாதனிடமும் நடுநடுவே இரண்டொரு வார்த்தைகள் பேசினார்.

ராமனாதனுக்கு அங்கே கட்டுப்பட்டதுபோல் உட்கார்ந்திருப்பது சங்கடமாயிருந்தது. ரொம்ப நாழியாகியும் செக்குக்குப் பணம் வரவில்லை. கிட்டத்தட்ட மணி ஒன்றாகும்போது ஏஜண்டு ரூமுக்கு ஒரு தடித்த போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்தார். ஏஜண்டுடன் அவர் ஏதோ பொதுவாய்ப் பேசிக்கொண்டே ராமனாதனுக்குப் பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்தார். ஏஜண்டுக்கு அப்போது ஒரு குமாஸ்தாவால் சில காகிதக் கத்தைகளும், நோட்டுப் புஸ்தகங்களும் கொண்டு வரப்பட்டன. ஏஜண்டு அவைகளிலிருந்து ஒரு செக்கைப் பொறுக்கி கையில் வைத்துக்கொண்டார். அது ராமனாதன் ''காஷ்' செய்ய எடுத்து வந்த செக்! ''இது சந்தேகாஸ்பதமாயிருக்கிறதென்று'' ஏஜண்டு ராமனாதனிடம் செக்கைக் காட்டினார்.

ராமநாதனுக்குத் தூக்கிவாரிப் போட்டதுபோலாயிற்று.போலீஸ் இன்ஸ்பெக்டர் தனக்காகத்தான் வரவழைக்கப்பட்டாரோ என்று நினைக்கலானான். இருந்தாலும் தைரியத்தை விடாமல் ''இந்தச் செக்கில் ஒன்றும் சந்தேகாஸ்பதம் இல்லை, என் தகப்பனார் கையெழுத்திட்டதுதான் இது. வேண்டுமானால் தகப்பனாரை டெலிபோனில் கூப்பிட்டுக் கேளுங்கள் என்றான் ராமநாதன். ஏஜண்டு அலட்சியச் சிரிப்புடன் தலையசைத்தார்.

இந்தக்கையெழுத்து ''போர்ஜரி'' என்று ஊகிக்க இடமிருக்கிறது என்றார்.

போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் ஏஜண்டு செக்கைக் காண்பித்தார்.

''நேற்று வந்த செக்கைக் கொண்டுவா'' என்று ஏஜண்டு ஒரு குமாஸ்தாவைப் பார்த்துச் சொன்னார்.

''அதுவும் அந்தப் பேரேட்டில் இருக்கிறது'' என்று குமாஸ்தா சுட்டிக்காட்டினார்.

இரண்டு செக்குகளையும் கையில் வைத்துக்கொண்டுஏஜண்டும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் சர்ச்சை செய்தார்கள்.

''ரூபாய் ஆயிரம்'' என்று எழுத்தில் எழுதியிருந்தது. ஒரே கையெழுத்தாகவிருந்தது.

''அப்படித்தானே இருக்கும்? இரண்டு செக்குகளையும் எழுதினவர் ஒருவரே. அதாவது என் தகப்பனார், ஆகையால் வேறுமாதிரியாய் இருக்குமா'' என்று ராமனாதன் கேட்டான்.

ஏஜண்டு ''செக்கு எல்லாம் தெரியுமா'' என்று சொல்லுகிறவர்போல் லேசாகச் சிரித்துக் கொண்டார்.

''வேங்கிடசுப்பையர் கையொப்பம் வித்யாசப்படுகிறது. நேற்று வந்த செக் ஒரிஜினலுக்குச் சரியாயிருக்கிறது. இன்றையச் செக்கின் கையொப்பம் கை நடுக்கத்தைக் காண்பிக்கிறது. இதைக் குற்றமற்றது என்று ஒப்புக்கொள்ள முடியாது.''

ராமனாதன் ஏஜண்டின் மௌட்டியத்தைப் போட்டு உடைத்துவிடலாமா என்று ஆத்திரப்பட்டான் ''நேற்று செக் உண்மையில் ''போர்ஜரி செக்'' அது சரிய

யிருக்கிறதாம். இன்றைய செக் ஸாக்ஷாத் வேங்கிட சுப்பையர் கையெழுத்திட்டது இது போர் ஜரியாம். இவ்வளவு மடையன்களுக்கு எவ்வளவு பெரிய உத்யோகம்—'' ஆனால் தனக்குத்தான் இந்த ரகஸ்யப் பிரகடனம் கேடு விளைவிக்கும் என்று உணர்ந்து ராமனாதன் தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான். மறுபடியும் தகப்பனாரைக் கூப்பிட்டுக் கேளுங்கள் என்று அவன் வற்புறுத்தினான்.

மேலும் ராமனாதன் செக்கின் பின்புறத்தில் எண்டார்ஸ் செய்திருப்பதையும், உள்ளே அவன் பெயர் தொகை பெற வேண்டியவராக எழுதியிருப்பதையும் ஒத்துப்பார்த்தும் ஏஜண்டு இரண்டும் ஒரே கையெழுத்து என்று சாதித்தார். இன்ஸ்பெக்டர் அதை ஆமோதித்தார்.

ராமனாதன், "டெலிபோனில் என் தகப்பனாரை நீங்கள் கூப்பிடுகிறீர்களா? அல்லது நான் கூப்பிட்டுமா'' என்றான் ஆத்திரத்துடன்.

ஏஜண்டு பரபரப்பில்லாமல், மெள்ள டெலிபோனில் வேங்கிட சுப்பையரைக் கூப்பிட்டார். ராமனாதன் அவர் ஆபீஸ் நெம்பரை ஞாபகப்படுத்தினான். டெலிபோனில் பதில் தாமதமாகவே கிடைத்தது. வெங்கிடசுப்பையர் கம்பெனியிலிருந்து லீவு கேட்டுக் கொண்டு வெளியூருக்குப் புறப்பட்டுவிட்டதாய்த் தெரிவிக்கப்பட்டது.

ராமனாதனுக்குத் தலையில் இடி விழுந்ததுபோலாயிற்று. "அப்படி அவசரமாய்ப் புறப்பட்டவர் பணத்திற்காக பாங்கிக்கு நான் வந்ததைப்பற்றி ஏன் டெலிபோனில் விசாரித்திருக்கக்கூடாது? பணமில்லாமல் பயணம் எப்படிப் புறப்பட்டார்?—"ராமனாதன் முகம் பயத்தினாலும் வெறுப்பினாலும் விகாரமடைந்தது. இன்ஸ்பெக்டர் அவன் கையை பற்றிக் கொண்டார். "நீ அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறாய்'' என்ற மந்திரத்தை அவர் உச்சரித்தார்.

"செக் சந்தேகாஸ்பதமானால் பணம்கொடுக்க மறுக்கலாமே ஒழிய அரெஸ்டு செய்ய நியாயமில்லை'' என்று ராமனாதன் வாதாடினான்.

"நியாயம் எங்களுக்குத் தெரியும்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

பின்பு ஏஜண்டுக்கும், இன்ஸ்பெக்டருக்கும் நடுவே சில தனிமையான பேச்சுவார்த்தைகள் நடந்தன.

ராமனாதன் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு காரில் கொண்டு போகப்பட்டான்.

(தொடரும்)



★

1948, செப்டம்பர்மீ 11உ புதுச்சேரி பாரதி ஞாபகார்த்த கமிட்டியாரால் வெகு சிறப்பாகக்கொண்டாடப்பட்ட பாரதி விழாவில், பாரதி பாடல் போட்டியில் முதற் பரிசு பெற்ற 12 வயதுள்ள குமாரி N. R. திலர்தவதி. பாரதிக்கமிட்டியார் அளித்த வெள்ளிக்கோப்பை பரிசை யோகி ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் வழங்கினர். குமாரி திலர்தவதி புதுவை நெ. 2, பெருமாள் கோவில் வீதி, ஜெனரல் மர்ச்செண்ட் ஸ்ரீமான் N. ராமசாமி செட்டியார் குமாரத்தி. புதுவை ஸங்கீத வித்துவான் ஸ்ரீ G. சந்திரசேகரன் மாணவி.

★


சத்வைத்யசாலை நஞ்சன்கூடு
"நஞ்சன்கூடு பல்பொடி"
பாகுடெரியின் சிறந்த மருந்துகள்
I.D.L.
குழந்தைகளுக்கு
12 காஸ்மர் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
குடும்ப அவசியங்கள்
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விஷபேதிக்கும் (காலரா)
23 பெயினோ (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....
தினஉதவிகள்
61 நஞ்சன்கூடு பல்பொடி ரீ ஏ. பல் வியாதிகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி.
மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்
ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறாஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

காஷ்மீர்-குஸும் என்ற மலர் மூலிகையை கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்
M.P.& E.co's ஸாண்டலக்ஸ் நறுமண சந்தனக் களிம்பு தீப்புண், வெட்டு, சொறி பரு, புண்களுக்கு (கூஷிவர உதவி)
M R ஜெட்டப்பா அவர்களின் பிரேமலீலா மைசூர் ஊதுவத்திகள் எமார்ஜஸ், அகர், அம்பர்
ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறாஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

# வீடுகட்டும் அற்புதம்!







பிலடல்பியாவில், 6 அறைகளுள்ள வீடுகள் அற்புதமாகத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. லாரிகளில ஏற்றி எந்த இடத்தில் வேண்டுமோ அங்கே வைத்துக்கொண்டு விடலாம். அமெரிக்காவில் வீட்டுப் பஞ்சத்தை இப்படிச் சமாளிக்கின்றனர். (1) தொழிற்சாலையில் மேற்படி வீட்டில் ஒருபகுதி உருக்கி வார்ப்பதற்காகத் தயாராக நிற்கிறது. (2) லாரியில் ஏற்றிவந்த வீடுகள் வெட்ட வெளியில் நிறுத்தப்படுகின்றன. (3) வீடு யூனிட்டுகள் ஒன்றாகிக் கிரகப்பிரவேசமும் ஆகிவிட்டது! தொழிற்சாலையில் உற்பத்தியான இவ்வீடுகளின் விலை 8950 டாலர்கள்.



சென்னை சர்க்கார் ஸ்தல ஸ்தாபன இலாகா உதவிக்காரியதரிசி ஸ்ரீ எஸ். சிவசாமி ஐயரின் புதல்வி சௌ. கல்யாணிக்கும், கும்பகோணம் ரிடயர்டு எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ டி. கே. முத்துஸ்வாமி ஐயரின் புதல்வர் சிர. எம். ராமமூர்த்திக்கும் சமீபத்தில் விவாகம் சிறப்பாக நடைபெற்றது.



"சுதேசமித்திரன்" விளம்பர இலாகா போர்மேன் ஸ்ரீ டி. ராமலிங்கம்பிள்ளை குமாரன் சிர. ஆர். ஆறுமுகத்துக்கும், மாங்காடு ஸ்ரீ ஆர். ஜெயவேலுப்பிள்ளை குமாரத்தி சௌ! விஜயலட்சுமிக்கும் சமீபத்தில் சென்னையில் விவாஹம் நடைபெற்றது.

பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீ பாலமலை ரங்கநாதர் மில் மானேஜிங் ஏஜண்டு ஸ்ரீ எஸ். கே. காவேட்டி நாயுடு குமாரர் சிர. கே. துரைசாமிக்கும், ஸ்ரீ ஆர். ராமகிருஷ்ண நாயுடு எம். எல். சி. குமாரத்தி சௌ. அம்ருதவல்லிக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

## பிரசுரமான க்ருதிகள்

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

**காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—**

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

**செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—**

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை
மவுண்ட் ரோடு, சென்னை.



(ப்ரான்ஸ் கோல்டு.)

பெண்களுக்கு சந்தோஷத்தை அளிக்கும இந்த நகைகளைப் பிரதிதினமும் உபயோகித்தாலும் நிறம் மாருது. பார்ப்பவர்கள் அசல் தங்கஆபரணங்கள் என்றே எண்ணுவார்கள். கியாரண்டி உள்ளவை. 4 ஆபரணங்கள் உள்ள வெல்வெட் பெட்டியுடன் போட்டியின் பயனுக ரூ. 5-12-0க்கு அனுப்பப்படும். நகைகளின் விபரம்:- (1) நெக்லஸ் செயின் (2) இரு ஜதை வளையல் (3) லோலக் ஒரு ஜதை (4) ரேடியோ கட்டிங் மோதிரம் ஒன்று. (பேபி செயின் ஒன்று இனம்.)

**அமேஜான் டிரேடிங் கம்பெனி,**
1/6 சாம்பய்யர் தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

## கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும நணபாகள, தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிககாட்டும் வண்ணம் உள்ளவையோ, பேரையோ குறிப்பிடாமிலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்.

# ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



**கட்டண விபரம்:-** 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3—க்கு மேல் கேள்வி 1—க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

**குறிப்பு** :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

**Lt. Col. M. N. C.** ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

**மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,**
**தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)**

# கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச்சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப்படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :

**சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,**
மைலாப்பூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

**என்ஸீ ஏஜன்ஸீஸ்,**
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.

Consult: Dr. V. ராஜரத்னம்,

For Nervous Debility, Diabetes, T. B., etc., at the above address.

# கதா மோகன ரஞ்சிதம்

**3-பாகங்கள்** **விலை ரூ. 2-8-0**

தபாற் செலவு பிரத்யேகம்.

**மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை**

*Lovely long hair*

**ASOKA AMLA**

**HAIR OIL**

100% மருந்து பூரவமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

**VIJAYA CHEMICAL & TOILET WORKS**
21 & 22 Suriyanarayana Chetty St.
Royapuram, Madras.

| | | | |
|---|---|---|---|
| A. B. C. Talks | 1 | 4 | 0 |
| ராமானுஜதர்சனம் | 1 | 0 | 0 |
| தீனதயாளு | 0 | 12 | 0 |
| பாலகங்காதர திலக் | 0 | 8 | 0 |
| ஸ்வராஜ்யம் | 0 | 8 | 0 |
| சங்கராச்சாரியார் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராம ஜனனம் | 0 | 4 | 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.
மானேஜர்
**" சுதேசமித்திரன் " புத்தகசாலை**
**மவுண்ட்ரோட், மதராஸ்.**

# க்ளூகோனேட்-டி

(கால்ஷியம் க்ளூகோனேட் விடமின் டி - யுடன்கூடியது)

க்ளூகோனேட் டி மாத்திரைகள் சுத்தமான கால்ஷியம் க்ளூகோனேட்டும் விடமின் டியும் மிகருசியுள்ள சாக்கலேட்டில் சேர்ந்திருப்பவைகள்: ஆதலால் குழந்தைகளும் பெரியோர்களும் அதை எளிதில் சாப்பிடமுடியும். கால்ஷியம் குறைவாயுள்ள எல்லாவியாதிக்கும் உபயோகமானது.

பெங்களூர், மல்லேஸ்வரத்தில் உள்ள தி மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட்டாரால் தயார் செய்யப்பட்டது.

ஒரு

I.T.L.

தயாரிப்பு

விற்பனை ஏஜன்டுகள்:

**பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,**

தபால் பெட்டி 63. சென்னை.

D.J.K.78.T.M.





எல்லாவித்தமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

**M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,**

28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.



டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

## ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொபரைட்டர்,

**ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்**

**37. மண்ணடி, மதராஸ்.**



மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது

அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

# பட்டு

**புடவைகள் வேஷ்டிகள்**

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

## C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

# இந்தியாவின் புகழ்




# லோத்ரா

**கர்பாசய ரோக நிவாரணி**

**கேஸரி குடீரம் லிட்., மதராஸ்**

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா

ஜெனரல் ஸ்டோர்ஸ்

பர்ஹாம்பூர்--செகந்திராபாத்

பெஜவாடா — மதுரை.

---

**பரிசு!** **பரிசு !!**




போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுதீர்கள். பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 1-10-0 N. B. 25 காலி உரை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.

**S. M. கிருஷ்ணா அண்டு கோ.,**
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ் 1.

---

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ.வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலின், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

**ரியல் அசோகா அண்டு கோ.,**
40. கிடங்கு தெரு, மதராஸ் 1.

---

# "பீம-வீர்"

"Bheema-Veer"

JAMADHAGNI OUSHADALAYA — MYLAPORE

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம் 40-நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

**ஜமதக்னி ஔஷதாலயா,**
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

---

# முத்து கழுத்து சங்கிலி:




இமிடேஷன் ஜவல்கள் (வைரம்பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்தஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர், லாக்கெட்டுடன் முழுசைஸ் ரூ. 3-10. இமிடேஷன் ஜுவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜுவல்களுடன் டஜன் ரூ. 5-8. ஜுவல் இல்லாது பூவேலைகளுடன் டஜன் ரூ. 4-8. ஒருடஜன் எந்தவித மோதிரம் வாங்கினாலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனாம். எல்லாவற்றிற்கும் தபால் செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிறோம்.

போட்டோ படங்கள்:-பிரபல பாரிஸ் அழகிகளின் படங்கள். வயது 16 முதல் 20 வரை, ரகசிய விவரணை கூடாது, டஜன் விலை ரூ. 4/8. எல்லாத்தேச தலைவர்கள் காந்தி, நேதாஜி முதலியவர்களின் படங்கள் டஜன் ரூ. 3/8. தபால் கார்டு சைஸ், தபால்செலவு கிடையாது. 1 அணா ஸ்டாம்பு அனுப்பி, ஆயுள் பூராவும் உபயோகிக்ககூடிய காலண்டரை பெறலாம்

**HENA AGENCY.**
NO. 14, Dr. Jagabandhu Lane, (S.W.)
Bowbazar P. O., CALCUTTA.

---



S.A.H

TRADE MARK

# Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு

முழுவதும் பிரசித்தி

பெற்று வரும்

## சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

**Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.***

# REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

**செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ.3.
தங்கம் விலை ரூ. 10.**

## நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி.பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

**KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P.O. Katrisarai, (Gaya)**

# உங்கள் எதிர்காலம்

பணமில்லமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

**வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.**

# குகன்
## சோப்புகள்




சலவைக்கு சிறந்தவை

## குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

## எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

# P.S.

பெருங்காயம் - பாதம் எண்ணெய் - அம்லா ஹேர் ஆயில் - வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் - ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபி குல்கந்து - பஞ்சாப்தேன் - முத்து பன்னீர் - ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் - இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

**மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.**

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

**சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,**
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

**B. Balapattabi Chettiyar,**
246, Vysyal St.,
**COIMBATORE.**



# சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட்பதவி உத்தியோகத்திலிருக்கும் Sri S. V. கணபதி (Hydrologist) 7-6-'48ல் எழுதுகிறார்:— "தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

**சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)**



குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷிமி பிரசாதம்

# (லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் :
வால்டேர், ஆர். எஸ்.

லக்ஷிமி & கோ.,
2/135, பிராட்வே, மதராஸ்.



வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

**ஸித்தமகரத்வஜம்**
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம், 30 மாத்திரை சீசா 1 ரூ. 7.

**மஹா பில்வாதி லேகியம்**
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

**ஸ்ரீ தன்வந்திரீ கவசம்**
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது, கவசம் 1-க்கு ரூ. 3.

**ஆனந்த படை நிவாரணி**
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

**ஆனந்த பற்பொடி**
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

**வைத்திய ஸித்தாச்ரமம்**
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்.


Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan B. A.

# ரீடா

## அழகிய கேசத்தை வளர்க்கிறது

ரீடா, கூந்தல் ஆரோக்கியத்தில் ஒரு புது முறை. அது கூந்தல் வேர்களுக்கு தேவையான இயற்கைபோஷாக்குகளை யூட்டி, பொடுகு வழுக்கையைத் தடுத்து அபார வசீகரத் தோற்றமுள்ள பட்டுப்போன்ற மிருதுவான கூந்தலை அடர்த்தியாக வளரச்செய்கிறது. அது பறட்டையான கூந்தலுக்கு பள பளப்பு அளிப்பதுடன் இஷ்டத்திற்குகந்தவாறு கூந்தலை படியவைப்பதற்கும் சிறந்தது. ஒரு புட்டி ரீடா வாங்கி உங்கள் கூந்தலுக்கு புத்துயிரளித்து புது அழகு பெறச் செய்யுங்கள்.

எங்கும் கிடைக்கும். **ஒரு புட்டி விலை அணு 15.**

## ஹிந்தி, ஆந்திரா, தமிழ், கன்னட சினிமா நக்ஷத்திரங்களெல்லோரும் போற்றுகின்றனர்.

**லலிதா பவர்:**—மிகச் சிறந்த கூந்தல் டானிக். தேவையுள்ளோர் அனைவருக்கும் ரீடாவையே சிபார்சு செய்வேன். நம் தாய் நாட்டில் இவ்வளவு அருமையான சரக்குகளை தயாரிப்பது பற்றி பெருமையடைகிறேன்.

**சாரதா ஜுனர்கார்:**—எனது சமீபத்திய அனுபவம் இது. கூந்தல் உதிர்வதை நிறுத்துவதற்கு ரீடாவைப் போன்ற அற்புத டானிக் வேறு கிடையாது. கேசத்தைப்பட்டுப்போல் மிருதுவாக்கி பளபளப்பூட்டும் அற்புத மூலிகைகள் இந்த தைலத்தில் இருக்கின்றன. கேச டானிக்குகளில் ரீடா மிகச்சிறந்தது என்பது உறுதி.

**கே. ஈச்வர்லால்:**—நான் ஒருமுறை ரீடா உபயோகித்தேன். அது முதல் என் குடும்பம் முழுவதும் ரீடாவையே உபயோகித்து வருகிறோம். தைலங்களில் ரீடா ஹேர் டானிக் மிகச்சிறந்தது என்பதை நண்பர்கள் அறிவது திண்ணம்.

**கூ ல் குமார்:**—நான்ரீடாகூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன். என் கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவிபுரிகிறதாகக் கண்டேன். மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மூளை குளிர்ச்சிக்கும் நான் இதை யாவர்க்கும் சிபார்சு செய்கிறேன்.

**ஜயந்த்:**—நான் கடந்த சில மாதங்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்ததில் அது சிறந்த தைலம் எனக் கண்டேன். ஸ்திரீகளின் கூந்தல் வளர்ச்சிக்கு ஏற்ற டானிக். ஆடவர்களின் கூந்தலைப் பாதுகாக்கச் சிறந்த டானிக்.

**கண்ணும்பா:**—ரீடா எல்லாவிதத்திலும் சிறந்தது என மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். அது உண்மையாய் அவ்வளவு பயனுள்ளது.

**புஷ்பவல்லி:**—ஒரு வருஷ காலமாக என் மயிர் உதிர்ந்துகொண்டேயிருந்தது. ரீடா உபயோகித்ததிலிருந்து மயிர் கொட்டுவது நின்றது. ரீடா என் கூந்தல் அழகைப்பாதுகாக்க உதவி புரிந்தது. ரீடா ஒரு சிறந்த கூந்தல் டானிக் என்பதே என் அபிப்பிராயம்.

**சூர்ய குமாரி:**—ரீடா நறுமணமுள்ளது. அதை தடவிக்கொண்டால் குளிர்ச்சியையூட்டுகிறது. நான் இனி ரீடாவையே உபயோகிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

**கிருஷ்ணவேணி:**—நான் சிலகாலமாக குளிர்ச்சியாக இருக்கும் நறுமண ரீடாவை உபயோகித்து வந்தேன். மயிர் உதிர்வதை தடுக்கவும், புது கேசத்தை வளர்க்கவும் ரீடா மிகச் சிறந்த டானிக் என்றே கூறுவேன். அந்நிய நாடுகளிலிருந்துவரும் கூந்தல் டானிக்குகளைவிட ரீடாசிறந்ததுஎன்பதே என் அபிப்ராயம்.

**வசுந்தரா தேவி:**—நான் ரீடாஉபயோகித்ததில் அடர்த்தியான கூந்தல் வளர்ச்சிக்கும், பாதுகாப்பும் அது சிறந்த கூந்தல் டானிக் என்று நிரூபித்துவிட்டது.

**ஆர். பத்மா:**—என்னை அழகூட்டும் என்னுடைய நீண்ட கருத்த கூந்தலுக்கு ரீடாதான் காரணம், அது எவ்வளவு சீக்கிரத்தில் பலனை அளிக்கிறது! அது என் கூந்தலை மிருதுவாக்கியதுடன் அடர்த்தியான வளர்ச்சியையும் அடைந்திருக்கிறது. கூந்தல் அழகுக்குரீடாவையேதான் அனைவருக்கும் சிபார்சு செய்வேன்.

**ராஜம்மா:**—கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நான் ரீடா உபயோகித்ததில் எவ்வித கூந்தல் சம்பந்த உபத்திரவங்களுக்கும் அது இணையற்றது என்று அறிந்தேன். அதில் கூந்தல் வளர்ச்சிக்குத் தேவையானதும் கேச உபத்திரவங்களைத் தடுப்பதுமான துமருந்துகள் இருக்கின்றன. அடர்த்தியாக அழகான கூந்தல் வளர்ச்சி விரும்பும் ஸ்திரீகள் அனைவருக்கும் ரீடா சாலச்சிறந்தது எனறே கூறுவேன்.

**லக்ஷ்மிபாய்:**—சில காலமாக ரீடா நான் உபயோகித்ததில அது ஈடு இணையற்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

**வி. என். ஜானகி:**—நான் வெகு நாட்களாக ரீடா கூந்தல் டானிக்கை உபயோகித்திருக்கிறேன், அது கூந்தல்வளர்ச்சிக்கும் கூந்தல் பாதுகாக்கவும் சிறந்த டானிக்.

**ஏ. ஆர். சகுந்தலா:**—நான் அனேக நாட்களாக ரீடா உபயோகிக்கிறேன். அது அளிக்கும் பயன் ஏராளம்.

# ரீடா ஹேர் டானிக்

Regd. No. 2514.



# அழகானவை

மனதைக்கவரும் நவீன மோஸ்தர் நகைகளே ஸூரஜ்மல்ஸ் கம்பெனியில் இருக்கின்றன. அவரவருக்குப் பிடித்தமான வித விதமான ரகமும், அழகும் பொருந்திய நகைகள்.

# சிறந்த ரகம்

ஸூரஜ்மல்ஸ் உண்மையான சிறந்த ரகத்துக்கு பெயர் பெற்றவர்கள் : பொறுக்கி எடுத்த கற்களே நகைகளுக்கு அதிர்ஷ்டமளிப்பவை. சுத்தமானதும், பிரகாசமுள்ளதும் உயர்ந்த ரகமுள்ளதுமான ரத்னங்களே உபயோகிக்கப்படுகின்றன.............................. அவற்றின் கட்டிடமும் வேலைப்பாடும் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் வசதியான தொழிற் சாலையில் செய்யப்படுவதால் இந்த ஸூரஜ்மல்ஸ் நகைகள் நீங்கள் விரும்பிப் போற்றத்தக்கவை.

**நேரடியான வியாபாரம் நன்மை தரும்.**



# ஸூரஜ்மல்ஸ்

## வைர வியாபாரிகள்

*1895*–ஆம் முதல் ஐம்பது வருஷங்களுக்கு மேலாக ஸூரஜ்மல்ஸ் நாடு முழுவதிலும் கியாதி பெற்றுள்ளனர். இப்புகழுக்கு இணையே கிடையாது. யாருக்கும் ஒரே விலை என்ற கொள்கை நாணயமான வியாபாரத்தின் அடையாளம். ஒவ்வொரு நகையுடனும் அவற்றின் உயர் ரகம், திருப்தியளிக்கும் தன்மைக்கு அவர்களது உத்தரவாதமும் கிடைக்கின்றது. உங்கள் நண்பர்கள் கொடுக்கும் விலையே நீங்களும் கொடுக்கிறீர்கள். ஆகையால் நம்பிக்கையுடன் நீங்கள் நேரிலே தபால் மூலம் நகைகள் வாங்க முடியும்.

ஸூரஜ்மல்ஸ் வைரங்கள்

**நம்பிக்கையானவை**

313, நேதாஜி ரோட் : : மதராஸ்.